# அன்னை இந்திரா



941.03
இந்தி
SL/PR

அந்தனி ஜீவா

# அன்னை இந்திரா

அந்தனி ஜீவா

தமிழ் மன்றம்

# *Annai Indira*

(Anecdotes of Indira Gandhi's life, in Tamil)

by

**ANTHONY JEEVA**

(C) Copyright reserved

First published in May, 1985

Cover design : **S. Doresamy**

Twenty-fifth Publication of :

THAMIL MANRAM,
Galhinna, Kandy.
Sri Lanka.

Price : Rs. 10/-
*in India Rs. 7/-*

Printed at :

THE KUMARAN PRESS,
201, Dam Street,
Colombo-12.

## சில வார்த்தைகள் ......

ஆசியாவின் ஜோதி
அன்னை இந்திராவை
இரண்டு தடவைகள் சந்தித்துள்ளேன்—
ஒன்று, பத்திரிகையாளனாக ;
மற்றது, பார்வையாளனாக.
அவருடைய கம்பீரத் தோற்றமும்,
ஒளி உமிழ்கின்ற கண்களும்...
பாரதத்தின் தலைவியாக மட்டுமல்ல,
பாசமிக்க தாயாகவும் கண்டேன்.

ஆசிய ஜோதியின் மறைவு கேட்டு...
சோக நினைவுகளை ஜீரணிக்க முடியாமல்,
வார்த்தைகளால் புலம்பினேன் —
அந்தப் புலம்பலே, இச் சிறு நூல்.
தினகரனில் சில வாரங்கள் வெளிவந்து,
பலரின் பாராட்டையும் பெற்றது.

எனது இலக்கிய முயற்சிகளுக்கு
களம் தந்த
''தினகரன்'' பிரதம ஆசிரியர்
திரு. ஆர். சிவகுருநாதன் அவர்கட்கும்
''தினகரன் வார மஞ்சரி'' ஆசிரியர்
திரு. எம். ஆர். சுப்பிரமணியம் அவர்கட்கும்
பத்திரிகைத்துறையில் அரிச்சுவடி பயிற்றுவித்த
ஆசான், தினபதி-சிந்தாமணி பிரதமஆசிரியர்
திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்கட்கும்
எனது மனமார்ந்த நன்றிகள்

இந்திரா காந்தி மீது கொண்ட அன்பின் காரணமாக,
இதனை வெளியிட முன்வந்த தமிழன்பர்
அல்ஹாஜ் எஸ். எம் ஹனிபாவுக்கு
நாடும் நல்லிதயங்களும்
நிச்சயமாக நன்றி சொல்லும்.

அந்தனி ஜீவா

57, மகிந்த பிளேஸ்,
கொழும்பு-6.

## தமிழகத்தில் அறிமுகமாகியுள்ள . . . !

தமிழகத்தில் பிரபல்யப்படுத்தப்பட்டிருக்கும் ஈழத்துக் ''கவிதா'' பற்றி இந்த வாரம் உங்களுடன் பகிர்ந்து கொள்வதாக கடந்த வாரம் சொல்லியிருந்தேன் !

கவிதா என்ற ஈழத்து எழுத்தாளர் யார் ?

ஒரே புனை பெயரில் இருவர் அல்லது மூவர் இருக்கின்றனரா ? ''கனவுகள் வாழ்கின்றன'' என்ற வீரகேசரி வெளியீட்டு நாவலை எழுதியவர் கவிதா என்ற பெண் எழுத்தாளர். அவரது புகைப்படமும் நூலில் இடம்பெற்றுள்ளது.

ஆனால், தமிழகத்தில் அறிமுகமாயுள்ள ''கவிதா'' ஒரு பெண் எழுத்தாளரல்லர், அவர் ஓர் ஆண் !

மணிமேகலைப் பிரசுரமாக ''பிரபலமானவர்களின் விலாசங்கள்'' என்ற நூலொன்று, இரு நூற்று ஐம்பத்தாறு பக்கங்களில் ஏறத்தாழ மூவாயிரம் தமிழ்ப் பிரமுகர்களின் பெயர், முகவரிகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

இந்த நூலில் இடம்பெற்றுள்ள ஈழத்தின் தமிழ் எழுத்தாளர் இவர் ஒருவர் மட்டும் தான் நூலில் தரப்பட்டுள்ள விவரத்தை அப்படியே தருகிறேன்.

''அந்தோனி ஜிவா (கவிதா), 57, மகிந்தா பிளேஸ், கொழும்பு-6 இலங்கை'' — இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நம்மவர், எமக்கெல்லாம் நன்கு தெரிந்த அந்தனி ஜீவா தான் !

நாடகம், சினிமா, விமர்சனம் என்று பல்வேறு இலக்கியத்துறைகளிலும் நன்கு புகழ் பெற்ற ஜீவா, முன்னொரு காலம் ஒரேயொரு சிறுகதையை கவிதா என்ற பெயரில் எழுதியதுடன் ஒரு சினிமா சஞ்சிகையை வெளியிட்டவர் என்பதும் இப்போதுதான் தெரியவந்துள்ளது.

தமிழகத்துக்கு அடிக்கடி போய் வரும் எங்கள் நாட்டு எழுத்தாளர்களையெல்லாம் மறைத்துவிட்டு, பிரபலமானவர்களின் விலாசங்களில் இடம்பெற்ற ஒரேயோர் ஈழத்துப் படைப்பாளியான அந்தோனி ஜிவா கெட்டிக்காரர் தான் !

அந்தனி ஜீவா எத்தனையோ சங்கங்களின் முக்கியமானவரும், பரபரப்பையும். சலசலப்பையும் ஏற்படுத்தும் கலகலப்பான இவர் தற்போது வெளியீட்டுத் துறையிலும் கால் வைத்துள்ளார்.

''ஜெயபாரதி வெளியீட்டகம்'' என்ற இவரது அமைப்பின் கன்னி வெளியீடாக கடந்த வாரம் ''யுகமலர்'' வெளியானது.

**['எஸ்தி'யின் ''அறுவடை'' தினகரன் வாரமலர் 1-5-83]**

## நியதிக்கு அப்பால்......

அரசியல், தமிழ் மன்றத்தின் இலட்சியத்திற்கு அப்பாற்பட்டது. அரசியல் பற்றியோ, அரசியலில் ஈடுபட்டிருப்பவர்கள், முன்பு ஈடுபட்டவர்கள் பற்றியோ நூல் வெளியிடவேண்டும் என்று நாம் எப்பொழுதும் விரும்பியதில்லை. ஆனால், எல்லா நியதிகளுக்கும், விதிவிலக்கென ஒன்றுண்டல்லவா? அந்த அடிப்படையில்தான், ''அன்னை இந்திரா'' பற்றிய நூலை வெளியிட வேண்டுமென விரும்பினோம். ''தினகரன்'' வாரமஞ்சரியில் வாசித்தபொழுதே, நூலுருவில் வெளியிடலாமென்ற விருப்பம் எழுந்தது. பின்னர், கட்டுரைகளை எழுதியவரான பல்கலை விற்பன்னர் அந்தனி ஜீவா, எம்மிடம் பிரசுரிக்கும்படி கேட்டபோது, மிக்க மகிழ்ச்சியுடன் அவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டோம்.

1962ம் ஆண்டில், இந்திரா காந்தி தனது தந்தை, பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுடன் இலங்கைக்கு வந்தார். அப்பொழுது அவர் கொழும்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் பகிரங்கச் சொற்பொழிவாற்றியதைக் கேட்டு மகிழும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அன்றிலிருந்து, அவரின்மீது எனக்குப் பெருமதிப்பு ஏற்பட்டது.

1939ம் ஆண்டில், எனது சின்னஞ்சிறு வயதில், ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, இலங்கை இந்திய காங்கிரஸை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்காக இலங்கை வந்தபோதே, கண்டி போகம்பர மைதானத்தில் பெருந்திரளாகக் குழுமியிருந்த இலட்சக் கணக்கானோருடன் சேர்ந்து அவரின் சொற்பெருக்கைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர், கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் 1962ம் ஆண்டில் நிகழ்த்திய பேச்சையும் கேட்டேன். இவற்றினால், இளமையிலிருந்தே இந்தியத் தலைவர்களின்மீது எனக்கிருந்த மதிப்பு, மேலும் வலுப்பட்டது.

ஆசியாவின் சமீபகாலச் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்ட பாரத விடுதலை இயக்கத்தின் ஆரம்பகாலத் தலைவர்களில் ஒருவரான மோதிலால் நேரு அவர்கள், பெரும் தியாகி. வழக்கறிஞராகத் தொழில் நடாத்திப் பெரும் பணம் சம்பாதித்திருந்த அவர், அலஹபாத்தின் மிகச் சிறந்த மாளிகையெனக் கருதக்கூடிய விதத்தில் அமைந்திருந்த தனது இல்லத்தையே தேசிய காங்கிரஸ் இயக்கத்திற்கு நன்கொடையாக வழங்கிவிட்டு, சாதாரண வீடொன்றில் குடிபுகுந்தார். அவரின் ஒரே புதல்வர் ஜவஹர்லால் நேரு, முதலில் சுதந்திரப் போராட்டத்திற்கும், பிறகு தாய்நாட்டுப் பணிக்கும் தன்னை முற்றாக அர்ப்பணித்தவர். அவரின் ஒரே பிள்ளையான இந்திரா, தந்தையின் அடிச்சுவட்டைப் பூரணமாகப் பின்பற்றியவர். அது மாத்திரமல்ல, நவீன உலகின் மிகச் சிறந்த பெரும் தலைவர்களில் ஒருவரான மகாத்மா காந்தியின் நிழலில் வளர்ந்தவர், இந்திரா. மௌலானா அபுல் கலாம் ஆஸாத், ராஜேந்திரப் பிரஸாத், டாக்டர் சாக்கீர் ஹுஸைன் போன்ற பெருந் தலைவர்களின் நல்லாசி பெற்ற அம்மையார். இந்த அடிப்படையில் பார்க்கும்போதுகூட, அளப்பரிய அரும்பணிபுரிந்த குடும்பத்தைச் சேர்ந்தவர், மிகப் பிரசித்தமான தலைவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர் என்பதாலும் அன்னை இந்திரா பற்றிய நூல் பிரசுரிக்கப்படுதல், மிகப் பெரும் பணியொன்று எனக் கருதலாம். இந்த நூலை வெளியிடும் வாய்ப்புத்தந்த அந்தனி ஜீவாவுக்கு எமது நன்றி.

எஸ். எம். ஹனிபா
நிர்வாகி.

தமிழ் மன்றம்,
கல்ஹின்ன.
21.4.1985

# எழுதாத முன்னுரை

நேரு தந்த பேரருளே! ராஜஸ்தான் பாலைவனத்தில் அணுகுண்டை வெடித்து; மண்ணுள வந்த நீ; மண்ணின் ஆழத்தாயே அளந்தாய்!

அண்டார்டிக்கா சென்று குளிர்ந்து இறுகிய பனிப் படலத்தின் அமைப்பினை ஆய்ந்தாய்!

அன்று பாற் கடலைக் கடைந்து வெண்ணெயாம் அமுதம் எடுத்தது போல் இன்று பம்பாய்க் கடலைக் குடைந்து எண்ணெயாம் அற்புதத்தைக் கண்டாய்!

மண்ணில் நடந்த இந்திய மனிதனை விண்ணில் நடக்க வைத்து விந்தையினைப் புரிந்தாய்!

விண்ணையும், மண்ணையும் அளந்து வெற்றி கண்ட தாயே; உன்னைச் சுற்றியிருந்த காவலரின் கருத்தளக்க மறந்து விட்டாயே! என்ன நடந்து விட்டது பார்த்தாயா?

உலகத்து சிற்பிகள் ஒன்றாய்ச் சேர்ந்து உருவாகிய ஒப்பற்ற சிலையை ஒரு நொடியில் உடைத்துத் தூளாக்கி விட்டது போல் ...

வானவில்லைக் குழைத்து வரைந்தெடுத்த ஓவியத்தைக் கணப் பொழுதில் கனலில் இட்டுக் கரியாக்கி விட்டது போல்...

ஓர் அனுபவப் பெட்டகத்தை அழித்து விட்டார்களே. மாபாவிகள்!

உன்னை வளர்த்து உருவாக்கியவர்கள் யார்? மோதிலால் நேரு; மகாத்மா காந்தி; பண்டித ஜவஹர்லால் நேரு; ரவீந்திரநாத் தாகூர்!

உன்னோடு படித்தவர்கள் யார்? புபேஷ் குப்தா; ஜோதி பாசு; மோகன் குமாரமங்கலம்; மினுமசானி.

நீ சந்தித்த தலைவர்களோ உலகச் சரித்திர ஏடுகளையே வீடுகளாக்கிக் கொண்டவர்கள்.

பாரதம் உன்னிடம் பத்திரமாக இருக்கும் என்று எடை போட்டு; தடை போட்டவர்கள், கோட்டைகளை உடைத்து உன்னை வெற்றி நடை போட வைத்தவரோ பெருந் தலைவர் காமராஜா!

ஆயிரம் ஆண்டு போர் தொடுப்போம் என்று வாய் வீரம் பேசியவர்கள் பாயிரம் எழுது முன்னே இந்திய வெற்றிக் காவியத்தையே எழுதி முடித்துப் புன்னகைத்த எங்கள் பொன் மகள் நீ!

''மேகம் உலாவும் பூமியெங்கும் சமாதானம் நிலவ வேண்டும். அதுவே எமது தாகம்'' என்று பாடிய தேவதை நீ!

அம்மா நீ; மனித இனத்தில் ஐந்தில் ஒரு பகுதியை ஆளும் தலைவி!

அணி சேரா 101 நாடுகளின் தலைவி என்ற வகையில், உலக மக்களை வரிசைப்படுத்தினால் ஐந்து பேரில் மூன்று பேருக்கு தலைவி நீ!

ஜனநாயகப்படி பெரும்பான்மை பார்த்தால் உலகத் தலைவி நீ தான் தாயே!

ராட்டையில் நூற்று ஒரு நாட்டையே தந்தார் காந்தி.

அந்த நாட்டையே வைத்து நூற்று ஒரு நாடுகளுக்குத் தலைவியானாய் நீ!

ஆமாம்; அம்மா; உன் பொற்கரம் பட்டு ஒன்று நூறாயிற்று.

அந்தத் திருவுருவமா இன்று வெந்து நிஜமாயிற்று! என்ன கொடுமை!

கொழுந்துவிட்ட நெருப்பிற்கும் எழுந்து சூழ்ந்த புகைக்கும் இடையே உன் மகன் ரஜீவ் காந்தி காட்சி தந்தது வேள்வியில் இருந்து தோன்றிய வேந்தனைப் போலிருந்தது.

ஆம்; இது நெய் சொரிந்து வளர்த்த யாகமல்ல; உன் மெய் எரிந்து வளர்த்த யாகமல்லவா?

கடைசிச் சொட்டு ரத்தத்தையும் பாரதத்திற்கே கொடுத்து விட்ட ரத்தினமே! நீ சிந்திய ரத்தம் வீண் போகாது இந்திய பூமி உன்னை மறக்காது,

குமரிக் கடல் அலையும், குளிர்ந்த இமய மலையும் இருக்கும் வரை நீயும் இருப்பாய்.

குண்டு துளைத்த தொண்டே, தீ தீண்டிய தென்றலே! கேள்.

ஆறாக ஓடும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தேறாமல் தவிக்கும் மனதைத் தேற்றிக் கொண்டு நாங்கள் ஏற்கும் சபதத்தைக் கேள்.

ஜாதி சமய பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை படைப்போம்! இது உறுதி!

இந்திய ஒருமைப்பாட்டைக் காப்போம்! இது உறுதி! இந்தியாவைக் காப்போம்; ஜனநாயகத்தைக் காப்போம்! இது உறுதி!

['குமுதம்' இதழில் குமரி அனந்தன் 'எழுதிய குண்டு துளைத்த தொண்டு'' என்ற கட்டுரையில் மனதை தொட்ட சில வரிகள் எழுதாத முன்னுரையாக இடம் பெற்றுள்ளன.]

"இந்திய மலைகள் தோறும்
இந்திரா பேர் கேட்டாயா ?
இந்திய நதிகள் எங்கும்
எதிரொலி கேட்கின்றதா ?''

— கவிஞர் கண்ணதாசன்

# அன்னை இந்திரா

ஆசியாவின் ஜோதி,

அன்னை இந்திரா,

அக்கினியுடன் சங்கமமாகி விட்டார்.

இந்தியாவின் எழுபத்து நாலு கோடி மக்களை மாத்திரமல்ல,

அகில உலகத்திலுமுள்ள அனைவரின் கண்களையும் குளமாக்கிவிட்டு ஆசிய ஜோதி அக்கினியுடன் கலந்துவிட்டது.

ஆசியாவின் விடி வெள்ளி !

அமரர் 'நேருவின் அருமைப் புதல்வி

இந்தியாவின் இருளகற்ற வந்த ஒளிவிளக்கு,

சுதந்திர பாரதத்தின் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, கொடிய நெஞ்சங்களின் துப்பாக்கி குண்டுகளுக்கு பலியாகி விட்டார்.

1984ம் ஆண்டு அக்டோபர் 31ம் திகதி, உலக வரலாற்றின் ஓர் அத்தியாயத்தில் இரத்தக்கறை படிந்துவிட்டது.

அணிசேரா இயக்கத்தின் ஒப்பற்ற தலைவியின் தலைவிதியை, இரு அரக்கர்களின் கரத்திலிருந்த பயங்கர ஆயுதம் நிர்ணயித்து விட்டது.

நாட்டின் தலைவியாக,

நாடாள வேண்டியவருக்குத் தாயாக,

ஆசியாவின் தவப்புதல்வியாக

இந்திய மக்களின் இலட்சியமாகத் திகழ்ந்தவர், இறுதி மூச்சை விட்டு விட்டார்.

ஆசியாவின் அணையா ஜோதி, அணைந்தது.

## தேசத்தின் சொத்து

இருபது ஆண்டுகள் இந்திய மக்களின் ஈடு இணையற்ற தலைவியாக, எழுபத்து நாலு கோடி மக்களின் இதயங்களில், தேசத்தின் சொத்தாக அன்னை இந்திரா திகழ்ந்துள்ளார்.

இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா, கல் நெஞ்சம் படைத்த கொடியவர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகுமுன்,

முதல் நாள் .........

ஒரிஸ்ஸா மாநிலத்தில்...



மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்த மாபெருங் கூட்டத்தில் பேசுகையில்,

"தேசத்துக்குச் சேவை புரியும்போது, நான் இறக்க நேரிட்டாலும் கூட, அதுபற்றி நான் பெருமையடைவேன்.

எனது ஒவ்வொரு துளி இரத்தமும், இந்த நாட்டின் வளர்ச்சிக்கும், அதன் பலத்துக்கும், ஸ்திரத்துக்கும் பங்களிக்கும் என உறுதியாக நம்புகிறேன்" என்று கூறினார்.

எத்தகைய துணிவோடு சாவைப் பற்றிச் சஞ்சலப்படாமல் அன்னை இந்திரா மொழிந்தார்.

துணிவு மிக்க ஒரு தலைவியின் திடீர் மறைவு உலகத்தையே துயரத்தில் ஆழ்த்தி விட்டது.

"இந்திய மண்ணோடு என்னை எரித்த சாம்பல் நன்றாக கலந்து விட வேண்டும்" இவ்வாறு அன்னை இந்திராவின் அருமைத்தந்தை, ஆசியாவின் ஒளிவிளக்கு பண்டிட் ஜவஹர்லால் நேரு உயிலில் எழுதி வைத்திருந்தார்.

அன்புத் தந்தை நேருஜியின் விருப்பப்படி, அவருடைய சாம்பல் இந்தியா முழுவதும் தூவப்பட்டது.

நேருவுக்கு மிகவும் பிரியமான காஷ்மீர் மலைப்பகுதிகளில் அச் சாம்பலை அன்னை இந்திராவே, தம் கைகளால் விமானத்திலிருந்தவாறு தூவினார்.

அன்னை இந்திராவின் குடும்பமே தேசத்தின் சொத்தாக திகழ்ந்துள்ளது.

அன்னை இந்திரா தான் இறந்த பிறகு தன் கண்களைக் கண் பார்வை இல்லாத ஒருவருக்குத் தானம் செய்ய வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறார்.

இந்த விடயம் அன்னை இந்திராவுடன் நெருக்கமான தொடர்புள்ள ஒரு சிலருக்குத் தவிர, மற்றவர்களுக்கு தெரியாது.

ஆசியாவின் விடி வெள்ளியான நேருஜி எப்படி தேசத்தின் சொத்தாக விளங்கினாரோ, அதைப் போலவே அன்னை இந்திராவும், தேசத்தின் சொத்தாகத் திகழ்ந்தார்.

அண்ணல் காந்தியின் அரவணைப்பில் வளர்ந்து, அரசியல் வானில் சுடர் நட்சத்திரமெனப் பிரகாசித்து, உலக அரசியல் அரங்கில் புகழ் பெற்ற தலைவியாக விளங்கினார்.

சின்னஞ்சிறு பிள்ளைப்பருவத்திலிருந்து, அன்னை இந்திரா அரசியலுடன் இரண்டறக்கலந்து வளர்ந்தவர். அவரது வாழ்வோடு அரசியலும் கலந்து விட்டது.

இந்திராவின் பாரம்பரிய புகழ் மிக்க பிராமணக் குடும்பத்தில், புனித கங்கையின் அருகில் அமைந்துள்ள அலகாபாத் நகரில் 1917-ம் ஆண்டு நவெம்பர் 19-ம் திகதி அன்னை இந்திரா பிறந்தார்.

இளவயதிலிருந்து, அன்னை இந்திரா அரசியலில் ஈடுபட்டாலும், நேருவின் மறைவுக்கு பின்னரே அவர் அரசியல் வானில் சுடர் விட ஆரம்பித்தார்.

1964-ம் ஆண்டு லால் பகதூர் சாஸ்திரி அமைத்த மந்திரி சபையில் செய்தித்துறை அமைச்சராக பதவி ஏற்றார். சாஸ்திரி மறைவுக்குப் பின்னர் 1966-ம் ஆண்டு அன்னை இந்திரா, பிரதமரானார்.

1966 ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு 186 வாக்குகள் வித்தியாசத்தில் திரு. மொரார்ஜி தேசாயைத் தோற்கடித்தவர், எழுந்து மேடைக்குச் செல்லு முன் மொரார்ஜி தேசாய் அருகில் சென்று, அவருக்கு வணக்கம் செலுத்தி, "என்னை ஆசீர்வதியுங்கள் மொரார்ஜி பாய்!" என்றார். அப்பொழுதே அவருள்ளத்தை, அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் புரிந்து கொண்டார்கள்



ஓர் அதி சாமர்த்தியமான அரசியல்வாதி என்பதைப் பல முறை அரசியல் அரங்கில் அன்னை இந்திரா நிரூபித்துள்ளார்.

அரசியல் வானில் ஒளி விட்ட அன்னை இந்திராவின் வாழ்க்கையை, அனைவரும் தெரிந்து கொள்வது அவசிய மாகும்.

## நேருவின் பிரியதர்சினி

"இந்திரா கூரிய நகங்களைக் கொண்ட ஒரு புறா" என்று பிரிட்டனின் புகழ்பெற்ற பத்திரிகையாளர் ஜோன் கிரிக் வர்ணித்துள்ளார்.

"காங்கிரஸ் மந்திரி சபையில் இருக்கும் ஒரே ஆண்" இது காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் வெளியிட்ட கருத்து.

இப்படி வர்ணிக்கப்பட்ட பாரதரத்தினமான, நேருவின் வாரிசாகிய அன்னை இந்திரா பிறந்தது முதல், துணிவு மிக்க வீராங்கனையாகவே வளர்க்கப்பட்டுள்ளார்.

காஷ்மீர் பிராமண வகுப்பைச்சேர்ந்தவர்கள் நேரு குடும்பத்தவர்கள்.

ஜவஹர்லால் நேருவின் பெரிய தந்தையார் காலத்தில் தான் அவர்கள் குடும்பம் ஆக்ராவிலிருந்து அலகாபாத்திற்கு வந்து குடியேறியது.

நேருவின் தந்தை மோதிலால் நேரு, வக்கீல் தொழில் புரிந்து வந்தார். நேரு பிறந்தவேளை அதிர்ஷ்டம் அவரைத் தேடிவந்தது.

1889-ம் ஆண்டு ஜவஹர்லால் நேரு பிறந்தார்.

மோதிலால் நேருவை வழக்குகள் தேடிவந்தன. வெற்றியும் அதைத் தொடர்ந்து வந்தது. அலகாபாத்தில் தலை சிறந்த வழக்கறிஞர்களில் அவரும் ஒருவர்.

1900-ம் ஆண்டு ஒரு பழைய கட்டடத்தை வாங்கி, அங்கே 'ஆனந்த பவனம்' என புதிய கட்டடத்தை கட்டி எழுப்பினார்.



வரலாற்றுப் புகழ்மிக்க ''ஆனந்த பவனம்''

ஆனந்த பவனத்தில் நேருவின் குடும்பம் மகிழ்ச்சியில் திளைத்தது.

1916-ம் ஆண்டு மார்ச் மாதம் ஜவஹர்லால் நேரு கமலாவை மணந்தார்.

ஜவஹர்லால் நேருவின் திருமண வைபவத்தை மிகவும் கோலாகலமாக, பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் டில்லி மாநகரில் நடத்திவைத்தார் மோதிலால் நேரு.

1917-ம் ஆண்டு நவம்பர் 19-ம் திகதி ஆனந்த பவனில் ஜவஹர்லால் நேருவும், மோதிலால் நேருவும் அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தார்கள்.



கமலா நேருவிற்கு பிறக்கப்போவது ஆண் குழந்தையா, பெண் குழந்தையா? என்ற தவிப்பு. அறையை விட்டு வெளியே வந்த பெண்மணியான டாக்டர் "ஓர் அழகிய பெண் குழந்தை'' என்று அறிவித்தார்.

நேருவின் தந்தை மோதிலால் நேருவுக்கு ஒரே மகிழ்ச்சி. ''ஜவஹரின் பெண் நாளை ஆண்களுக்கு ஈடாக இருக்கலாம்'' என வாழ்த்தினார். அத்துடன் தன் தாயின் நினைவாக 'இந்திரா' எனப் பெயரிட்டார் மோதிலால் நேரு.

''பிரியதர்சினி'' என்று தன் பெண்ணுக்குப் பெயர் சூட்டினார் ஜவஹர்லால் நேரு.

இந்திராவிற்கு இரண்டு வயதானபோது, நேருவின் குடும்பத்தில் ஒரு மிகப் பெரிய திருப்பம் ஏற்பட்டது.

அந்தத் திருப்பமே இந்திய வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுத வைத்தது.

ஆனந்த பவனத்தின் ஆடம்பரமும், மகிழ்ச்சியும் ஓடி ஒளிந்தன.

இதற்கு என்ன காரணம்?

1919-ம் ஆண்டு ஏப்ரல் 12-ம் திகதி நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் மைதானப் படுகொலைகள், நேரு குடும்பத்தினரை காந்திஜியின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளச் செய்தன.

ஜவஹர்லால் நேருவுக்கும் அவரது துணைவியார் இந்திராவின் அருமைத் தாயார் கமலாவிற்கும், காந்திஜி மீது உள்ள ஈடுபாட்டை ஏற்கனவே மோதிலால் அறிந்து வைத்திருந்தார்.



அன்னையின் மடியில், அருமைப் புதல்வி

ஜாலியன் வாலாப் படுகொலைக்கு முன்னர் காந்திஜியை ஆனந்த பவனத்திற்கு அழைத்து, அவருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார், மோதிலால்.

ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பின்னர். ஆனந்த பவனத்தின் ஆடரம்பர வாழ்வு தூக்கி எறியப்பட்டது.



ஆனந்த பவனத்தில் அடிக்கடி நடைபெறும் கேளிக்கைகளும், விருந்து வைபவங்களும் நிறுத்தப்பட்டன.

பட்டும், பகட்டுமாக வந்த விருந்தாளிகள் போய், கதராடை அணிந்த காந்தீய வாதிகளும், சத்தியாக்கிரகிகளும் ஆனந்த பவனத்திற்கு அடிக்கடி வந்தார்கள்.

1921-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ம் திகதி ஆனந்த பவனத்திற்குள் உத்தரவின்றிப் பொலிஸார் உள்ளே நுழைந்தனர்.

இந்திராவின் தந்தை ஜவஹர்லால் நேருவையும், தாத்தா மோதிலால் நேருவையும் கைது செய்தனர்.

அப்பொழுது சிறுமி இந்திராவுக்கு நான்கே வயது.

நான்கு வயதுச் சிறுமியான இந்திராவிற்குத் தந்தையையும், தாத்தாவையும் பொலிஸ் கைது செய்து கொண்டு போனது விளையாட்டுச் சம்பவமாகவே தென்பட்டது.

மறுநாள் கோர்ட்டில் காங்கிரஸ்காரர்கள் எனக் கைது செய்யப்பட்ட ஜவஹர்லால் நேரு மீதும் மோதிலால் மீதும் வழக்கு நடந்தபொழுது...

இந்திரா, தாத்தா மோதிலால் நேருவின் மடிமீது அமர்ந்து கோர்ட் நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இருவர்மீதும் சத்தியாக்கிரகிகள் என்ற குற்றச்சாட்டை சுமத்தி, ஆறு மாதச் சிறைத் தண்டனையும் ஐநூறு ரூபா அபராதமும் விதிக்கப்பட்டன.

அபராதத்தை கட்ட இருவருமே மறுத்தார்கள். மறுநாள் ஆனந்த பவனத்திற்கு பொலிஸ் படையொன்று வந்தது.

ஆனந்த பவனத்திலிருந்த விலை மதிப்பற்ற பாரசீகக் கம்பளங்களைப் பொலிஸார் அதிகாரப் பலத்துடன் எடுத்த பொழுது,

ஆனந்த பவனே அமைதியாகவிருந்தது.

அப்பொழுது ..............

"நீங்கள் இவற்றை எடுக்கக்கூடாது. இவை எங்களுக்குச் சொந்தமானவை" என்று கத்திக் கொண்டே நான்கு வயதுச் சிறுமியான இந்திரா பொலிஸ்காரர்களை வழி மறித்தார்.

அந்த இளம் வயதிலேயே பொலிஸ் மீதும், அதிகார வர்க்கத்தின் மீதும் இந்திராவிற்கு வெறுப்பு ஏற்பட்டது.

இந்திராவிற்கு ஐந்து வயதாகும் பொழுது ஆனந்த பவனத்தின் நிலை அடியோடு மாறி விட்டது.

அங்கு அரசியல் புகுந்து விட்டது. இந்திராவின் பஞ்சு போன்ற பிஞ்சு மனத்திலும் புதிய மாற்றம் ஏற்பட்டது

பக்கத்து வீட்டுப் பாலகர்களைப் போல, பொம்மைகளை வைத்துக்கொண்டு குழந்தை விளையாட்டை இந்திரா விளையாடவில்லை.

பொம்மைகளுக்கு கதராடை உடுத்தி, அவைகளின் கைகளிலே காங்கிரஸ் கொடியைக் கொடுத்து, அணிவகுத்து நடக்கச் செய்வார்.

எதிர்ப்பக்கத்தில் பொலிஸ்காரர்கள் போன்ற உடை உடுத்திய பொம்மைகளின் கைகளில் கம்புகளைக் கொடுத்து காங்கிரஸ்காரர்களைத் தாக்க வருவது போல அணிவகுத்து நிற்கச் செய்வார்.

பின்னர், கதராடை அணிந்த காங்கிரஸ் பொம்மைகளைப் பார்த்து,



"சத்தியாக்கிரகிகளே! பயப்படாமல் முன்னேறுங்கள் அவர்கள் அதிகாரம் நம்மை என்ன செய்யும்......" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறுவார்.

பிறகு, தானே காங்கிரஸ் தொண்டர்களைப் போல கம்பீர நடை நடப்பார்.

இது போன்று.........

இன்னொரு சம்பவமும் இந்திராவின் இளகிய நெஞ்சத்தை இரும்பாக்கியது.

## கதராடை அணிதல்!

மகாத்மா காந்திஜியின் அறைகூவலுக்குச் செவி சாய்த்து அனைவரும் அந்நிய துணிமணிகளைத் தீயிட்டுக் கொளுத்திய காலம்.

இந்திராவின் அருமைத் தாயார் கமலாவும், பாட்டி ஸ்வரூபராணியும், மற்றும் அத்தைமார்கள், உறவினர்கள் ஏன் ஆனந்தபவனத்தில் உள்ள அனைவரும் அந்நிய நாட்டுத் துணிமணிகளை அக்கினிக்கு இரையாக்கினார்கள்.

அந்நிய நாட்டுத் துணிகள் அக்கினியில் சாம்பலாகும் காட்சியினை, அந்தப் பிஞ்சு விழிகள் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தன.

அந்தப் பிஞ்சு நெஞ்சிலும் ஓர் உறுதி ஏற்பட்டது.

அழகான வேலைப்பாடுகளைக் கொண்ட தன் பட்டுத் துணிமணிகளை ஆர்வத்துடன் 'தீ'க்கு தீனியாகக் கொடுத்தார்.

அருமை அன்னையார் கமலாவும், அத்தைமார்களான விஜயலட்சுமியும், கிருஷ்ணாவும் கதரினாலான குர்தா, பைஜாமா, காந்தி குல்லாப் போன்றவற்றை அணியத் தொடங்கினார்கள்,

இந்திராவும் தனக்கு அது போன்ற உடைகள்தான் வேண்டும் என அடம் பிடிக்க ஆரம்பித்தார்,



துணிவுமிக்க சிறுமி, இந்திரா

இந்திராவும் இள வயது முதல் கதராடைகளையே விரும்பி அணியத் தொடங்கினார்.

ஜவஹர்லால் நேருவும் மோதிலால் நேருவும் சிறையில் இருக்கும் வேளையில்தான் முதன் முதலாக நேரு குடும்பத்தினர் காந்திஜியைச் சந்திக்க சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்றனர்.

மகாத்மா காந்தியின் தொடர்பு, நேரு குடும்பத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

சிறுமி இந்திராவின் சுறுசுறுப்பும், துடிதுடிப்பும் மகாத்மாவை பெரிதும் கவர்ந்தன.

காந்திஜி சிறுமி இந்திராவிடம் உரையாடுவதை பெரிதும் விரும்பினார்.

இந்திராவின் அறிவு வளர, பல கதைகளை காந்திஜி கூறுவார்.

தந்தையும், தாத்தாவும் சிறைச்சாலையில் இருந்ததால் தன் பெரும் பொழுதை பாட்டியிடமே கழித்தார் இந்திரா. விளையாட்டை விட படிப்பதிலே அக்கறை காட்டினார்.



## விடுதலை வீராங்கனை

இந்திராவுக்கு ஆறு வயதாகும் பொழுது அவருக்குப் பிடித்தமான விளையாட்டு... பிரான்ஸ் நாட்டு விடுதலை வீராங்கனையான ஜோான் ஒப் ஆர்க்காகத் தன்னை நினைத்துக் கொள்வார்.

ஜோன் ஒப் ஆர்க் என்று தன்னை நினைத்துக் கொண்டு தலைமயிர் பறக்க, விழிகளை உருட்டிக்கொண்டு "நானும் ஒரு ஜோான் ஒப் ஆர்க்" என்று உரக்கக் கூவுவார்.

நேரு குடும்பமே அரசியலில் ஈடுபட்டு விட்டதால், முறையான பள்ளி வாழ்க்கை என்பது இந்திராவுக்கு இல்லாது போயிற்று.

1923 - ம் ஆண்டு. அப்பொழுது இந்திராவிற்கு ஆறு வயது. அலகாபாத் சென். ஸிஸிலியா பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

இந்திராவின் அருமைத் தாயார் கமலா நேருவின் உடல் நலம் பாதிக்கப்பட்டதால், 1926 - ம் ஆண்டு பெற்றோருடன் இந்திராவும் வெளிநாடு சென்றார்.

ஜெனீவா சுகவாசஸ்தலத்தில் கமலா வைத்திய சிகிச்சைக்காக இருந்த நேரத்தில், மலைகள் சூழ்ந்த, இயற்கையின் எழில் குடி கொண்ட பெக்ஸ் என்ற இடத்திலுள்ள கல்லூரியில், நேரு இந்திராவைச் சேர்த்தார்.

இயற்கை எழில் கொஞ்சும் மலைகள் சூழ்ந்த பெக்ஸின் அமைதியான சூழ்நிலையும் பனிபடர்ந்த மலைசிகரங்களும் சிறுமி இந்திராவை பெரிதும் கவர்ந்தன.

இந்தக் கல்லூரியிலும் அதிக நாட்கள் கல்வி பயிலும் வாய்ப்பு இந்திராவுக்குக் கிடைக்கவில்லை.

1927-ம் ஆண்டு பெற்றேர் தாய் நாடு திரும்பியதும் இந்திரா சென். மேரிஸ் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

இந்திராவின் கல்வி ஒரு சீரான முறையில் தொடராத காரணத்தால், தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களை நியமித்து, கல்வி போதிக்க ஏற்பாடு செய்தார் தாத்தா மோதிலால்.

புத்தகங்களைப் படிப்பதில் இந்திரா அதிக ஆர்வம் காட்டி வந்தார். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் படிக்கும்படி அறிவு வளரும் நல்ல நூல்களைத் தந்தையும் தாத்தாவும் தேடிக் கொடுத்தார்கள்.

## நேருவின் கடிதங்கள்

1928-ம் ஆண்டு நைணி சிறையிலிருந்த ஜவஹர்லால் நேரு தன் மகளின் கல்வியைப் பற்றி எண்ணி வருந்திஞர்.

சிறையிலிருந்தவாறு, மகளுக்கு கடித மூலம் தனக்கு தெரிந்த விடயங்களை எழுதலாஞர்.

நேரு சிறையிலிருந்து எழுதிய ஒரு கடிதத்தில்...

''அன்புள்ள இந்திரா பிரியதர்சினி... இன்று உனக்கு பிறந்த நாள். வழக்கமாக நான் உனக்கு இந்த நாளில் ஏராளமான பரிசுகளைக் கொடுப்பேன் இல்லையா? ஆனுல் சிறையிலிருக்கும் இத்தந்தை உனக்கு என்ன கொடுக்க இயலும்? எங்கோ இருக்கும் என்னிடமிருந்து பரிசாக ஒன்றும் கிடைக்காவிட்டாலும் என் உளமார்ந்த ஆசிகள் உனக்கு எப்போதும் உண்டு''

அவர் தொடர்ந்து எழுதுகிருர்......

''நீ பிறந்த வருடம் உலகத்தின் முக்கியமான வருடங்களில் ஒன்று. நீ பிறந்த அதே மாதத்தில் ரஷ்யாவின் பெரும் தலைவர் லெனின் ரஷ்யப் புரட்சியைத் துவக்கி வெற்றி கண்டார்.



''ரஷ்யப் புரட்சி உருவாகி அந்த நாட்டின் எதிர் காலமே மாறியதைப் போன்று நம் பாரதத்திலும் நடக்க இருக்கிறது. இன்றைய இந்தியாவின் சரித்திரத்தை நல்ல முறையில் உருவாக்கும் கால கட்டத்தில் நாம் இருக்கிறேம். இந்த காரியத்தில் நீ, நான் ஏன் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் ஈடுபட வேண்டும். நீ சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிருயா என்று உன்னையே நீ அடிக்கடி கேட்டுக்கொள். மறைவில் எதையும் செய்யாதே. ஏனெனில் மறைவிலும் இருட்டிலும் பல காரியங்கள் ஆக்கமுறைக்கு உதவுபவை அல்ல''

இவ்வாறு நேரு எழுதிய முப்பது கடிதங்களும் தந்தை மகளிடம் கொண்டுள்ள பாசத்தை எடுத்துக்காட்டுவதாக மட்டும் இல்லை.

பத்து வயது சிறுமிக்கு பல விஷயங்களை எடுத்துச் சொல்லும் அறிவுக்களஞ்சியமாக இருந்தன.

''ஒரு தந்தை தன் மகளுக்கு எழுதிய கடிதங்கள்'' என்ற தலைப்பில் பிரசுரமாகி இருக்கும் இந்தக்கடிதத் தொகுப்பை இன்று உலகின் பல்வேறு மொழியினரும் படித்து மகிழ்கின்றனர்.

பன்னிரண்டு வயது பாலகியாக இந்திரா இருந்த சமயத்தில், குடும்பத்தில் உள்ள அனைவருமே காங்கிரஸ் கட்சியில் அங்கத்தவராகிவிட்டனர்,

காங்கிரஸ் கட்சியில் தன்னையும் அங்கத்தவராக்கும்படி இந்திரா அடம்பிடித்தார்.

பதினெட்டு வயதை எட்டிப்பிடித்த பிறகு அங்கத்தவராகலாம் என அன்னையார் அன்புக்கட்டளை போட்டுவிட்டார்.

துணிவுமிக்க சிறுமியான இந்திராவுக்கு அடக்கமுடியாத கோபம்.

''நீங்கள் என்னை அங்கத்தவராகச் சேர்க்காவிட்டால் போங்கள். நான் சொந்தத்தில் கட்சி ஒன்று ஆரம்பிக்கப் போகிறேன்'' என இந்திரா சவால் விட்டார்.

அத்துடன், இந்திரா சும்மா இருந்து விடவில்லை. 'தேனீ' யைப்போலச் சுறுசுறுப்பானார்.

## வானரப் படை

இந்திரா தனது அன்புக்குப் பாத்திரமான தோழர்களையும் தோழியர்களையும் அழைத்தார்.

"ஏழை - பணக்காரர் என்று வித்தியாசம் பாராட்டாமல் உங்களுக்குத் தெரிந்த எல்லாச் சிறுவர் சிறுமியர்களையும் அழைத்துக் கொண்டு நாளைக்கு எங்கள் வீட்டுப் புல்வெளிக்கு வந்து விடுங்கள்''

இவ்வாறு இந்திரா அன்புக்கட்டளை போட்டார். மறு நாள் நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியர் கூடி விட்டார்கள்.

நாட்டில் பரவிய சுதந்திரத் ''தீ'' குழந்தைகளின் நெஞ்சிலும் பரவியிருந்த காலம்.

கூடியிருந்த பிஞ்சு நெஞ்சங்களின் மத்தியில் சிறுமி இந்திரா ஒரு தலைவியைப்போல பேசினார்.

''நாங்கள் இங்கு எதற்காகக் கூடியிருக்கிறோம் தெரியுமா?''

எல்லாரும் அமைதியாக இந்திரா கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"நாங்கள் ஒரு கட்சி ஆரம்பிக்கப் போகிறோம். அதில் நீங்கள் எல்லாரும் சேரத் தயாரா?''

கூடியிருந்த எல்லாச் சிறுவர் சிறுமியர்களும் 'நாங்கள் சேரத் தயார்' எனக் கூச்சலிட்டார்கள்.



''நம் கட்சிக்கு வானரப் படை என்று பெயர். நாம் நாட்டுக்கு நேரடியாகச் சேவை செய்ய முடியாவிட்டாலும் மறைமுகமாக காங்கிரஸ் கட்சிக்கு உதவி செய்யலாம்.

''நாம் செய்யும் காரியத்தில் நாம் பிடிப்பட்டாலும் சிறை செல்ல மாட்டோம். ஆனால் அடிகள் வாங்க நேரிடும். இதற்கு நீங்கள் எல்லாம் தயாரா?''

மீண்டும் இந்திரா கேட்டார்.

எல்லாரும் ஒரே குரலில் ''நாங்கள் தயார்'' எனக் கூறினார்கள்.

இந்திரா அமைத்த இந்த வானரப் படை, காங்கிரஸுக்குப் பல உதவிகள் புரிந்தது.

இந்திரா அமைத்த வானரப் படையின் அங்கத்தவர்கள் எண்ணிக்கை ஆயிரத்தைத் தொடும்போதுதான், பெரியவர்களுக்கு அந்தப் படையைப்பற்றி தெரிய வந்தது.

வானரப் படை என்று கேலி பேசியவர்கள் எல்லாரும், அந்தப்படை தன் முழுப் பலத்தையும் காட்டத் தொடங்கிய பொழுதுதான் அதன் சேவையைக் கண்டு வியப்படைந்தார்கள்.

காங்கிரஸ் அங்கத்தவர்கள் செய்துவந்த வேலையை இந்த வானரப் படை செய்ய ஆரம்பித்தது.

நோட்டிஸ் எழுதுவது!

துண்டுப் பிரசுரங்களை மக்களிடம் விநியோகிப்பது, நோட்டிஸ்களை தெருக்களில் ஒட்டுவது, சத்தியாக்கிரகிகளுக்குத் தண்ணீர் கொடுப்பது, சில இரகசியத் தகவல்களை காங்கிரஸ் தலைவர்களுக்கு கொண்டு செல்வது.

சில சந்தர்ப்பங்களில் முக்கியமான கடமைகளையும் இந்த வானரப் படை செய்திருக்கிறது. பொலிஸ் படை காங்

கிரஸ் அங்கத்தவர்களை உளவறியும்பொழுது, அவர்கள் அருகில் இந்த வானரப் படை அங்கத்தினர் விளையாடுவது போல் பாவனை செய்வார்கள்.

சிறு பிள்ளைகள்தானே என அவர்கள் இவர்களை அலட்சியப்படுத்திவிட்டுப் பேசுவார்கள். அவர்கள் பேசும் விடயங்களைக் கேட்டறிந்து, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தகவல் தருவார்கள்.

வானரப் படை பற்றிய செய்தி சிறையிலிருந்த மோதிலால் நேரு வரை போய்விட்டது.

அவர் இந்த விடயம் பற்றி இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் ''இந்து என்ன இது .. வானரப் படை என்று அமர்க்களப்படுகிறது. எனக்கு அதைப்பற்றி விவரமாக எழுது. அனுமார் படம் போட்ட சின்னத்தை உங்கள் உறுப்பினர் அணிந்துகொண்டால் பொருத்தமாக இருக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அன்னை இந்திரா சின்னஞ் சிறு பாலகியாக இருந்த பொழுது அசாத்திய துணிச்சலுடன் செயல்பட்டார் என்பதற்கு இது போன்ற பல சம்பவங்கள் உண்டு.

1929-ம் ஆண்டு ஆனந்த பவனம் மாளிகையை தேசிய காங்கிரஸிற்கு மோதிலால் நேரு கொடுத்துவிட்டு, மற்றொரு சிறிய வீட்டைக் கட்டி அதற்கு ''ஆனந்த பவனம்'' எனப் பெயரிட்டார்.

காங்கிரஸுக்குக் கொடுத்த ஆனந்த பவனத்தின் பெயரை ''ஸ்வராஜ் பவனம்'' என பெயர் மாற்றப்பட்டது.

இந்திரா, தான் பிறந்து, ஆடி ஓடி விளையாடிய ஆனந்த பவனத்தை விட்டுப் பிரியும் போது பன்னிரெண்டு வயது.

1931-ம் ஆண்டு நேரு குடும்பத்தினர்க்கு ஒரு மாபெரும் இழப்பு ஏற்பட்டது.



நோய் வாய்ப்பட்டிருந்த மோதிலால் நேரு காலமானார்.

காந்திஜியின் அறிவுரையின் பேரில், இந்திரா பூனாவிலுள்ள ஒரு பாடசாலையில் சேர்ந்தார்.

இந்திரா இப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் நாட்டின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டுக்கொண்டிருந்த ஜவஹர்லால் நேரு சிறையிலிருந்தவாறு உலக சரித்திரத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளை எல்லாம் கடித மூலம் இந்திராவிற்கு எழுதிக்கொண்டு இருந்தார்.

இந்திராவிற்கு எழுதிய கடைசிக் கடிதத்தில் ''அன்பே, கதை முடிந்து விட்டது. இனி நான் எழுத வேண்டியதில்லை. ஆனால் கதை ஜோராக முடிய வேண்டும் என்னும் விருப்பம் என்னை இன்னொரு கடிதம் – கடைசிக் கடிதம், எழுதுமாறு தூண்டுகிறது. எனது இரண்டு வருடத் தண்டனைக் காலம் முடிய வேண்டும் என்று நீ கருதுவாய்.

...நான் இக்கடிதங்களில் எழுதியுள்ள எதையும் நீ முடிந்த முடிவாக கொள்ளக்கூடாது. ஓர் அரசியல் வாதி எப்போதும் எல்லாவற்றைப்பற்றியும் ஏதாவது சொல்லிவைக்க விரும்புவான். தனக்கு எல்லாம் தெரிந்தது போலக் காட்டிக்கொள்வான். அவன் மீது எப்பொழுதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டும்.''

இவ்வாறு எல்லாம் ஜவஹர்லால் நேரு தன் கடிதங்களில் அறிவுரை கூறினார்.

அக்கடிதங்கள் இன்று ''உலக சரித்திரத்தின் காட்சிகள்'' என்ற உலகப் புகழ் பெற்ற புத்தகமாக அமைந்துள்ளது.

1933-ம் ஆண்டு நவம்பர் இந்திராவுக்கு பதினாலாவது வயது. ஜவஹர்லால் நேரு கைதான செய்தியும் இந்திராவின் பிறந்த நாளும் ஒன்றாக வருகின்றன.

ஜவஹர்லால் நேரு ஆருவது தடவையாக கைது செய்யப்படுகின்ருர். தந்தையிடமிருந்து ''இன்ளுெரு வீட்டிற்குப் போகிறேன் மகளே'' என்ற தந்தியைத்தான் இந்திரா தனது பிறந்த நாள் வாழ்த்தாகப் பெற முடிந்தது.

## சாந்தி நிகேதனில். . . .

அருமைத்தாயாரின் வைத்திய சிகிச்சைக்காக இந்திராவும் அன்னையாருடன் கல்கத்தா வந்தார்.

அன்னையார் கமலாவுக்கு வைத்திய சிகிச்சைகள் நடக்கையில். கல்கத்தா சிறையிலிருந்த தந்தையார் ஜவஹர்லால் நேருவைப் பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை, கல்கத்தா சிறையில் சந்தித்து இருபது நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதி கிடைத்தது.

கல்கத்தா வாழ்க்கை இந்திராவின் மனதிற்கு இனிமையாகவும், இதமாகவும் இருந்தது.

அங்கு இரவீந்திரநாத் தாகூர் நடத்தி வந்த ''சாந்தி நிகேதனத்தில்'' பள்ளி இறுதி ஆண்டை முடித்துவிட்டு இந்திரா சேர்ந்தார்'

கல்கத்தா வாழ்க்கையைப் பற்றி, பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் இந்திரா எழுதுகையில்...

''கல்கத்தாவில் நான் வாழ்ந்த அந்த ஓர் ஆண்டில்தான் எத்தனையோ புதிய சுவைகளை உணர்ந்தேன்.

''மாலை நேரத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த தாயை அழைத்துக்கொண்டு நதிக் கரையிலிருந்த இராம கிருஷ்ண ஆசிரமத்திற்குச் செல்வேன். மணிக் கணக்கில் ஒருவரோடு ஒருவர் பேசாமல் அமர்ந்து தியானம் போன்ற அமைதியில் ஈடுபடும்பொழுது எனக்கு உலகத்தையே நன்கு புரிந்துகொண்டது போன்ற உணர்வு ஏற்படும்.



''அந்த ஆண்டில்தான் நான் தாகூரின் சாந்திநிகேதனத்தில் சேர்ந்தேன். கலை என்ருல் என்ன என்பதைப் பற்றி பரிபூரணமாக உணர்ந்தது அப்பொழுது தான்.

''எங்கள் குரு ஓவியம் வரைவார், உரக்கக் கவிதைகள் படிப்பார். நான் மெய் மறந்து உருகிப்போய் நின்றதும் அப்போதுதான்.

''எப்படியோ உணர்ச்சி அற்றவளாய் வாழ்ந்து வந்த என்னுள் பெரிய திருப்பத்தை உண்டாக்கியது நான் சாந்தி நிகேதனத்தில் கழித்த ஓர் ஆண்டுதான்.

''நாட்டியத்திலும், பாட்டிலும், ஓவியத்திலும், கவிதைகளிலும், கலைகளிலும் எனக்கு ஈடுபாடு உண்டானதே அந்த ஆண்டில்தான்.

''மென்மையான பல உணர்வுகள் என் நெஞ்சத்தில் விழிப்புற்றதும் அந்த ஆண்டில்தான்.

இன்றைக்கும் என்னிடம் இருக்கும் பல இரசனைகளை தந்தது சாந்திநிகேதனே.

இவ்வாறு தன் நினைவுகளை இந்திரா எழுதி வைத்துள்ளார்.

மணிப்புரி நடனம் கற்றுக் கொண்டு சில நிகழ்ச்சிகளில் இந்திரா பங்கெடுத்துக் கொண்டதும் அச்சமயத்தில்தான்.

சாந்தி நிகேதனத்தில் கற்ற நடன ஞானத்தை வைத்துக்கொண்டு மேற்படிப்புக்காக இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் இந்திரா பல நடன நிகழ்ச்சிகளுக்கு அமைப்பாளராக இருந்து அவற்றைத்திறம்பட நடத்திக் கொடுத்துள்ளார்.

1935-ம் ஆண்டு கல்கத்தாவை விட்டுத் தாயாருடன் வைத்திய சிகிச்சைக்காக ஐரோப்பாவிற்குப் பயணமாஞர்.

## பெரோஸ் காந்தி!

அதே நேரத்தில் பெரோஸ் காந்தியும் இங்கிலாந்துக்கு மேற்படிப்புக்காக வந்திருந்தார். அவர் அங்கிருந்தது இந்திராவிற்கு பெரிதும் துணையாக இருந்தது.

பெரோஸ் காந்தி, ஏற்கனவே இந்திரா குடும்பத்திற்கு அறிமுகமாகியிருந்தார்.

பெரோஸ் காந்தி, நேரு குடும்பத்திற்கு முதன் முதலில் அறிமுகமானது கமலாவின் மூலம்தான்.

ஜவஹர்லால் நேரு சிறையில் இருந்த வேளையில் கமலா காங்கிரஸ் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

ஒரு நாள் கமலா பெண்களைத்திரட்டி ஊர்வலம் நடத்திக்கொண்டு போன போதுதான் பெரோஸ் காந்தியை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

பெண்மணிகளின் ஊர்வலம் அலகாபாத் தெருக்களைச் சுற்றிக் கொண்டு, ஆண்கள் கல்லூரி முகப்பில் நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தது.

ஊர்வலத்தின் முன்னணியிலிருந்த கமலா நேரு திடீரென மயங்கி விழ, வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருந்த மாணவர்கள் சிலர் ஓடி வந்து, அவரைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்று தண்ணீர் தெளித்து மயக்கத்தைப் போக்கினார்கள்

அந்த மாணவர் கூட்டத்தில் ஒருவரான பெரோஸ் காந்தி கமலா நேருவிற்கு அறிமுகமானார்.

கமலா நேருவின் நாட்டுப்பற்றும் சுதந்திர உணர்வும், தீவிரமான நடவடிக்கைகளும், பெரோஸ் காந்தியைக் கவர்ந்து விட, உடனடியாக பெரோஸ் காந்தியின் தலைமையில் அந்த மாணவர் கூட்டம் கல்லூரியை விட்டு விலகி காங்கிரஸ் தொண்டர்களாக சேர்ந்தது.



கமலா நேரு செல்லும் இடங்களுக்குத் தானும் கூடவே சென்று, அவரது தூய தொண்டிற்குத் துணை புரியத் தொடங்கினார்.

இதனால், பெரோஸ் காந்திக்கு நேரு குடும்பத்துடன் நெருக்கமான நட்பு ஏற்பட்டது.

பெரோஸ் காந்தி பிறந்தது, ஒரு நடுத்தரமன பார்ஸி குடும்பத்தில்.

1936-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ம் திகதி கமலா நேரு மரணமடைந்த பொழுது, அவர் அருகில் இந்திரா, ஜவஹர்லால் நேரு, பேரோஸ் காந்தி ஆகிய மூவரும் உடனிருந்தனர்.

இந்திய தேசிய காங்கிரஸிற்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதாலும், விடுதலைப் போரின் பெரும் பொறுப்பு தம்மீது விழுந்து விட்டதாலும், இந்திராவை தனியே விட்டு, ஜவஹர்லால் நேரு நாடு திரும்பினார்.

துயரமிக்க அந்த நாட்களில் இந்திராவுக்கு துணையாக இருந்து ஆறுதலும், தேறுதலும் கூறினார் பெரோஸ் காந்தி.

1937-ம் ஆண்டு ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் இந்திரா தன் கல்வியைத் தொடர்ந்தார்.

ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் இந்திரா இருந்தகாலதில் பல சுவையான சம்பவங்கள் நடைபெற்றன.

ஒக்ஸ்போர்ட் மாணவர் சங்கத்தில் உறுப்பினராக இருந்த இந்திரா சங்க நடவடிக்கைகள் அனைத்திலும் பங்கு கொண்டார்.

லண்டனில் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் தலைமையில் 'இந்தியா லீக்' இயங்கிக் கொண்டிருந்தது.

இந்த இந்தியா லீக் நடவடிக்கைகளில் அடிக்கடி லண்டன் சென்று இந்திரா பங்கெடுத்துக் கொள்வார்.

ஒரு சமயம், இந்தியா லீக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பெருந் தொகையானோர் கூடியிருந்தனர். அந்தக் கூட்டத்தில் இந்திராவும் இருந்தார்.

இந்திராவிடம் திரு. கிருஷ்ணமேனன் இந்தியாவிலிருந்து ஜவஹர்லால் நேருவிடமிருந்து வந்திருக்கும் ஒரு அதி முக்கிய செய்தியை கூட்டத்தில் வாசிக்கும்படி கூறியிருந்தார்.

தந்தையிடமிருந்து வந்த செய்திதானே பார்த்து வாசித்து விடலாம் எனத் தைரியமாக இருந்தார் இந்திரா.

இதற்கு முன் பெரியவர்கள் மத்தியில் கூட்டங்களில் மேடையில் ஏறி இந்திரா பேசியதில்லை.

கூட்டத்திலிருந்த முக்கியமான ஒருவர் ''நேருவின் புதல்வி முதலில் பேசிவிட்டு, ஜவஹர்லால் நேருவின் செய்தியை வாசிப்பார்'' என அறிவித்தார்.

இந்திரா கூட்டத்தினர் முன்னிலையில் மேடையில் ஏறி பேச முற்பட்டார். வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை கூட்டத்தில் ஒரே சலசலப்பு.

இந்திராவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பேசாமல் தந்தையின் செய்தியை வாசித்து விட்டுத் தலை குனிந்தவாறு மேடையிலிருந்து இறங்கினார்.

அன்றிலிருந்து பேச வேண்டும் என உறுதி பூண்டார்.

ஆனால். . . .

பல ஆண்டுகளுக்குப் பின். . . .

அணிசேரா இயக்கத்தின் தலைவியான அன்னை இந்திராவின் பேச்சை அகில உலகமே ஆர்வத்துடன் கேட்டது.



இந்தியப் பிரதமரான இந்திராவின் பேச்சைக் கேட்க இந்திய மக்கள் கோடிக்கணக்கில் குவிந்தார்கள்.

## சிறையில் தந்தை

1941-ம் ஆண்டு சிறையிலிருக்கும் தந்தையைக் காணச் சென்ற இந்திரா, தந்தையிடம் தான் பெரோஸ் காந்தியை மணக்க விரும்புவதாகக் கூறினார்,

இந்திரா, பெரோஸ் காந்தியைத் திருமணம் செய்யப் போகும் செய்தி நாடெங்கும் காட்டுத் தீ போல பரவி விட்டது.

இது சம்பந்தமாக பல ஆயிரக்கணக்கான கடிதங்கள் நேருவுக்கும், காந்திஜிக்கும் வந்தன.

ஓர் இந்துப்பெண்மணிக்கும், பார்ஸி சமூதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் நடக்கும் இந்த திருமணம் செல்லுபடியாகாது என எச்சரிக்கை கடிதங்களும் வந்தன.

ஜவஹர்லால்நேரு, இந்திரா-பெரோஸ் காந்தி திருமணம் பற்றி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்தார்.

''திருமணம் என்பது ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் ஓரளவுக்கு அவர்கள் குடும்பத்தினரையும் பொறுத்த விஷயம். இதைப்பற்றி எந்த ஒரு முடிவும் செய்யும் அதிகாரம் அவர்களுக்கே உள்ளது. இந்திராவும் பெரோஸ் காந்தியும் திருமணம் செய்துகொள்ள ஆசைப்பட்டார்கள்.

எனவே, அவர்கள் என் மனப்பூர்வமான ஆசிகளுடன் திருமணம் செய்துகொள்ளப் போகிறார்கள்'' என்று ஜவஹர்லால் நேரு அறிக்கை விடுத்தார்.

இந்திராவும், பெரோஸ் காந்தியும் எந்தவித ஆடம்பரமுமின்றி மிக எளிமையாகத் திருமணம் செய்துகொள்ள

விரும்பினர்கள். இதுபற்றி காந்திஜியைக் கலந்தாலோசித்தார்கள்.

"தந்தை விரும்பவில்லை அதனால் இரகசியமாகத் திருமணம் செய்துகொண்டார்கள் என்று நாடே பேசும். அதனால் திருமணத்தைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்'' என காந்திஜி ஆலோசனை கூறினர்.

காந்திஜியின் விருப்பத்திற்கிணங்க இந்திராவும் பெரோஸ் காந்தியும் திருமணத்தை விமரிசையாக நடத்த ஒத்துக்கொண்டார்கள்.



பணைக்கோலத்தில் பங்கை இந்திரா



1942-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதி இந்திராவின் வாழ்வில் ஒரு முக்கியமான நாள்.

ஜவஹர்லால் நேரு சிறையில் செய்த ரோஜா வண்ண கைத்தறிச் சேலையை உடுத்தி, காஷ்மீர் வழக்கப்படி பூக்களால் ஆன அணிகலன்கள் அணிந்து, தந்தை கரம் பற்றி கொடுக்க, பெரோஸ் காந்தியின் கரத்தைப்பற்றி அக்கினியை ஏழு முறை வலம் வந்து இந்திரா, இந்திரா காந்தியானர்.

திருமணம் இனிதே நிறைவேறியது. தேனிலவுக்காகப் புதுமணத் தம்பதிகள் காஷ்மீர் போனர்கள்.

தேனிலவை இனிமையாகக் கழித்துவிட்டு அலகாபாத் நகரில் புதுவாழ்வை இனிமையாகத் தொடங்கினர் இந்திரா காந்தி.

ஆனந்தமான புதுவாழ்வு ஆறு மாதங்கள் கூட தொடரவில்லை. அவர்களின் அமைதியான வாழ்வில் புயல் வீசியது.

1942-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பம்பாயில் நடந்த காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் ''வெள்ளையனே வெளியேறு'' போராட்டத்தை ஆரம்பிப்பது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதே நேரத்தில் அரசாங்கம் அனைத்திந்திய காங்கிரஸ் தலைவர்களை ஓர் அறிவிப்பும் இல்லாமல் கைது செய்தது.

ஜவஹர்லால் நேருவும் கைதுசெய்யப்பட்டார், ஜவஹர்லால் நேரு கைது செய்யப்பட்ட சம்பவத்தைப் பற்றி நேருவின் சகோதரி கிருஷ்ணா ஹத்திசிங் எழுதிய குறிப்பு ஒன்றில்......

''ஜவஹர், இந்திரா, பெரோஸ் அனைவரும் காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்காக எங்கள் வீட்டில்தான் தங்கியிருந்தார்கள். எங்கள் வீடு சிறிதானதால், அவர்களுக்கு

எங்கள் படுக்கை அறைகளை கொடுத்துவிட்டு, நானும் என் கணவர் ராஜாவும் எங்கள் நண்பர்கள் இல்லங்களில் இரவு களைக் கழிப்போம்.

"குவிட் இந்தியா", என்ற போராட்டத்தை அமுலாக்குவது என்ற தீர்மானம் எடுத்த இரவு எங்கள் நண்பர் உறங்கிக்கொண்டிருந்த ராஜாவையும் என்னையும் "உங்கள் வீட்டுக்குப் பொலிஸ் படை எடுத்திருக்கிறது" என்ற அதிர்ச்சி தரும் தகவலைச் சொல்லி எழுப்பினார்.

"அவசரம் அவசரமாக எங்கள் இல்லத்திற்கு வந்தோம் .....

ஜவஹரையும், பெரோசையும் தன் வீட்டில் தங்க வைத்த குற்றத்திற்காக ராஜாவையும் கைதுசெய்து கொண்டு போனார்கள்.

பின்னால், இன்னொரு வண்டியில் அவர்களைத் தொடர்ந்து சென்ற நாங்கள் சாரி, சாரியாக வண்டிகளில் மகாத்மா காந்திஜி உட்பட, எல்லாத் தலைவர்களையும் கண்டதும், அனைத்திந்திய காங்கிரஸ் தலைவர்களைக் கைதுசெய்துவிட்டது அரசாங்கம் என்பது புரிந்தது."

இவ்வாறு ஜவஹர்லால் நேருவின் சகோதரி கிருஷ்ணா தான் எழுதிய புத்தகமொன்றில் மேற்சொன்ன நிகழ்ச்சியைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

ஜவஹர்லால் நேரு கைதான பிறகு, இந்திராவும் பெரோஸும் ரயிலில் மீண்டும் அலகாபாத்திற்கு திரும்பினார்கள்.

சுதந்திரமாகத் திரிந்தால் பொலிஸ்காரர்களிடம் மாட்டிக்கொள்ள நேரிடும் என்றறிந்த பெரோஸ் காந்தி மீசை அடர்த்தியாக வளர்த்துக்கொண்டு, காக்கி உடையை



அணிந்துகொண்டு ஆங்கிலோ-இந்திய சிப்பாயைப்போல வேடமிட்டு காங்கிரஸுக்கு இரகசியமாகத் தொண்டாற்றினார்.

இந்தவேளையில் பெரோஸ் காந்தியைக் கைதுசெய்ய உத்தரவு வர, அவர் தலைமறைவானார்.

இதனால், அரசியல் ஈடுபாடில்லாத நண்பர்களின் இல்லத்தில் இந்திராவும் பெரோஸ் காந்தியும் அடிக்கடி இரகசியமாக சந்திப்பார்கள். தலைமறைவாகச் செயற்படும் தொண்டர்களுக்கு வேண்டிய பணமும், ஏனைய தலைவர்களைப் பற்றிய விவரங்களும் இந்திரா பெரோஸ் மூலம் தான் சென்றடைந்தன.

## சிறையில் இந்திரா

நாட்டுப் பற்றும் சுதந்திர தாகமும் 'தீ'யாக எரிந்த அந்த நாட்களில்......

அலகாபாத் நகரில் கல்லூரி ஒன்றில் காங்கிரஸ் கொடியை ஏற்ற அழைத்ததும் இந்திராவும் எல்லையில்லாத மகிழ்ச்சியுடன் போனார்.

கல்லூரியில் நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னரே கூட்டம் கூட்டமாக வந்திறங்கிய பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்யத் தொடங்கினார்கள்.

கொடிகளை கைகளில் பிடித்துக்கொண்டிருந்த மாணவர்களை பொலிஸார், தடியால் தாக்கியபொழுது, ஒரு மாணவன் கையிலிருந்த கொடி கீழே விழப்போன சமயத்தில், பாய்ந்தோடி அக்கொடியைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டார் இந்திரா.

இந்திராவின் இச்செய்கையைக் கண்ட மாணவர்கள் மகிழ்ச்சியுடன் இந்திராவைச் சுற்றி நின்று கோஷமிட்டனர்.

இதனால், ஆத்திரம் கொண்ட போலிஸார் குண்டாந் தடியால் இரக்கமற்றுத் தாக்கினார்கள்.

இந்திராவின் கைகளிலும், முதுகிலும் அடிகள் விழுந்த வண்ணம் இருந்தன. ஆனால் இந்திரா கொடியைத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்தவாறு ஜெய கோஷமிட்டுக்கொண்டே இருந்தார்.

அன்றிரவு அடிபட்டுப் படுக்கையில் கிடந்த மனைவியைக் காண வந்த கணவர் பெரோஸ் காந்தியிடம் தான் அடிபட்ட வலியை மறந்து, எப்படியும் கொடியைக் காப்பாற்றி விட்டதைப்பற்றிப் பெருமையுடன் குறிப்பிட்டார்.

செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் தன்னையும் கைது செய்யப்போகிறார்கள் என்ற விஷயம் இந்திராவின் காதுகளுக்கு எட்டியது. ஒருசில துணிமணிகளையும் ஒரு பெட்டி நிறைய புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு இந்திரா தலைமறைவாகிவிட்டார்.

போலிஸ் இந்திரா, பெரோஸ் காந்தி இருவரையும் வலை போட்டு தேடியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் தொண்டர் கூட்டம் நடைபெறும். அதில், காங்கிரஸ் தலைவர்களைப் பற்றிய செய்திகளைச் சொல்லப் போவதாக இந்திரா அறிவித்தார்.

இந்தத் தகவல், வாய்ச்செய்தி மூலமாக எல்லாத் தொண்டர்களுக்கும் எட்டியது.

மாலையில் ஆயிரக் கணக்கில் கூடிவிட்டார்கள். எங்கிருந்தோ மின்னல் போல் இந்திரா தோன்றினார். மேடையேறி காங்கிரஸ் தொண்டர்கள் மத்தியில் எரிமலைப் போல் குமுறினார்.

அதற்குள், இராணுவப் படைவீரர்கள் கூட்டம், கூட்டமாக வந்து மக்களை சுற்றி வளைத்துக் கொண்டனர்.



இராணுவ அதிகாரி ஒருவர் இந்திரா முன் துப்பாக்கியை நீட்டியபடி 'வா' என்றவாறு கையை இழுக்க முனைந்தார்.

எங்கிருந்தோ ஓடிவந்து, இந்திராவிற்கும் அதிகாரிக்கும் இடையில் புகுந்து நின்றார் பெரோஸ் காந்தி.

பெரோஸ் காந்தியையும், இந்திராவையும் கைது செய்து வண்டியில் ஏற்றினார்கள்.

சிறை அனுபவத்தைப் பற்றி இந்திரா எழுதிய குறிப்பில்......

''இருபத்திரண்டு பெண்களுடன் என்னையும் ஓர் அறையில் வைத்திருந்தார்கள். அந்தச் சிறிய அறையில் நாங்கள் அனைவரும் விடாமல் பேசிக்கொண்டிருந்ததால் பைத்தியம் பிடிப்பது நிச்சயம் என்று உணர்ந்து, என்னுடன் மாலை ஐந்து மணிவரை யாரும் பேசக்கூடாது என்று பழக்கம் செய்து கொண்டேன்.

''என்னுடன் எடுத்துக் கொண்டுவந்த புத்தகங்கள் என் பொழுதைப் போக்க பெருமளவு உதவின. ஏ. பி. ஸி. என்று அவர்களுக்குக் கொடுக்கும் சலுகையை குறிப்பிட்டிருந்தார்கள். என் அட்டையில் இவை ஒன்றும் இருக்க வில்லை. ''எக்ஸ்'' (''X'') என்ற குறிதான் உண்டு. எனக்கு எந்த விதமான சலுகையும் கிடையாது எனப் பொருள்.''

பதின்மூன்று மாதங்கள் நான்கு சுவர்களுக்குள் கூண்டுக் கிளியானார் இந்திரா.

இந்திரா ஒரு தீவிரவாதி என்று கருதப்பட்டதால் சாதாரண சிறைக் கைதிக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் அவருக்கு அறவே மறுக்கப்பட்டன.

பத்திரிகைகள் படிக்கக் கூடாது, கடிதங்கள் எழுதக் கூடாது. வெளியிலிருந்து வரும் கடிதங்களைப் பெறவும்

கூடாது என்ற கண்டிப்பு இந்திராவுக்கு சிறையில் விதிக்கப் பட்டது.

பின்னர், இதைப் பற்றி இந்திரா வெளிநாட்டு நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியில்......

''சிறு வயதிலிருந்தே நான் பல முறை சிறைச் சாலைக்குச் சென்று என் தந்தை உட்படப் பல உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்திருக்கிறேன். அதனால் சிறைத் தண்டனை என்பது எனக்குப் பயத்தைக் கொடுக்கவில்லை.

''ஆனால், நான் கற்பனை செய்து வைத்திருந்த சிறை வாழ்க்கையும் நேரில் அனுபவித்த சிறை வாழ்க்கையும் மிகவும் மாறுபட்டு இருந்ததை உணர்ந்த போது அது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''என் கற்பனைக்கும், நிஜத்துக்கும் உள்ள வேறுபாடு எனக்கு அதிர்ச்சியாக இருந்ததே தவிர, இதுவே என்னைப் பாதிக்க விடவில்லை.

''மேலும், சிறைத் தண்டனை பெற்றுப் போவதை அந்நாளில் ஒரு பரிசாகவே அனைவரும் ஏற்றுக்கொண்டிருந்ததால் நானும் அப்படியே ஏற்றுக் கொண்டேன். நான் அச்சமயம் கைதாகி போகவில்லை என்றால் எனக்கு ஒரு குறையே இருந்திருக்கும். சிறைக்குப் போனதை என் வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாக நினைக்கிறேன்.''

இந்திராவுடன் சிறையிலிருந்த திருமதி விஜயலட்சுமி பண்டிட் தன் தினக் குறிப்பில் எழுதுகிறார்......

''இன்று இந்துவுக்கு பிறந்த நாள், இன்று அவள், பெரோஸ் காந்தியைக் காணச் சம்மதம் கொடுத்தார்கள். இருபது நிமிடங்கள் கணவனுடன் பேசிவிட்டு இந்து திரும்புகையில் அவள் மனமும் முகமும் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தன.



''பொழுதை வீண் விரயம் செய்யாமல் கழிக்க வெகு சீக்கிரத்தில் கற்றுக் கொண்டுவிட்டாள் இந்திரா. தன் கூட இருந்த பல பெண்மணிகளுக்குப் பாடம் சொல்லித்தரலானாள்.

''கல்வி அறிவு இல்லாமல் இருந்த ஒரு பெண்ணுக்கு இந்திரா கல்வி பயிற்சி அளித்த விதம் அப்பெண் சிறையை விட்டு வெளியேறியதும் ஒரு சிறுவர் பள்ளியில் வேலை பார்க்கும் அளவுக்கு இருந்தது''

அந்தப் பெண்ணின் குழந்தையை, சின்னஞ்சிறு குழந்தையை, கண்காணிப்பதைத் தன் தலையாய பொறுப்பாக எண்ணி வந்தார் இந்திரா. என்றுமே குழந்தைகளென்றால் அளவு கடந்த பிரியம் இந்திராவுக்கு. இது மிகவும் பிடித்தமான வேலையாக இருந்தது. குழந்தை மீது நாளாவட்டத்தில் இந்திரா கொண்டுவிட்ட பாசம் அக் குழந்தையைத் தானே தத்தெடுத்துக் கொள்ளலாமா என்று எண்ணும் அளவுக்கு போய்விட்டதாம்.

1943-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பெரோஸ் காந்தியும் விடுதலை செய்யப்பட்டார்.

## ராஜீவ் பிறந்தார்

1944-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் திகதி ராஜீவ் பிறந்தார்.

அருமைத் தாயின் நினைவாக அன்பு மைந்தனுக்கு ராஜீவ் என்ற பெயரை இந்திரா சூட்டினார்.

ராஜீவ் என்றாலும் கமலா என்றாலும் தாமரையைத்தான் குறிக்கும்.

பம்பாயில், அத்தை கிருஷ்ணாவின் வீட்டில் ராஜீவ்வுடன் இரண்டு மாதங்களை இன்பமாக கழித்தார்.

பிறகு, லக்னோவிற்கு சென்று அன்புக் கணவர் பெரோஸ் காந்தியுடன் இந்திரா தனிக் குடித்தனம் நடத்தினர்.

ஒரு சில மாதங்களில் மீண்டும் அலகாபாத் சென்று அங்கு ஆனந்த பவனிலேயே தங்கினார்கள்.

குழந்தை ராஜீவை வளர்ப்பதிலேயே தன் முழு நேரத்தையும் இந்திரா செலவழித்தார்.

இந்தக் காலத்தில் பெரோஸ் காந்தி ஐரோப்பாவில் தான் எடுத்த புகைப் படங்களை வைத்துக்கொண்டு அதற்குத் தகுந்த கட்டுரைகள் பத்திரிகைகளுக்கு எழுதுவதிலும், இன்ஷூரன்ஸ் ஏஜன்ஸி எடுப்பதிலும் ஈடுபட்டுவந்தார்.

பெரோஸ் காந்தியின் நிர்வாகத் திறமையையும் செயல் துடிப்பையும் கண்ட ஜவஹர்லால் நேரு 1946-ம் ஆண்டு லக்னோவில் அவரால் ஆரம்பிக்கப்பட்டு, நடந்துவந்த தேசிய தினசரியான ''நெஷனல் ஹேரால்ட்'' என்ற தினசரியில் நிர்வாகப் பொறுப்பாளராக நியமித்தார்.

மீண்டும், இந்திரா கணவருடன் லக்னோவிற்கு வந்தார்.

கணவர் பெரோஸ் காந்தியின் புதிய பணிகளில் வெற்றி பெற இந்திராவும் துணைபுரிந்தார்.

இந்த வேளையில்தான் தற்காலிக இந்திய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு, தற்காலிக மந்திரியாக ஜவஹர்லால் நேரு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1946-ல் டிசம்பர் 14-ம் திகதி சஞ்சாய் பிறந்தார்.

இரண்டாவது பேரன் சஞ்சாய் காந்தி பிறந்தான் என செய்தி கேட்டு, உறங்கிக்கொண்டிருந்த ஜவஹர்லால் நேருவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, ஆஸ்பத்திரிக்கு வந்து மகளையும் பேரனையும் பார்த்து மகிழ்ந்தார்.



நாட்டின் சுதந்திரத்திற்குப் பிறகு சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதம மந்திரியாக ஜவஹர்லால் நேரு தேர்ந்தெடுக்கப்பட்டார். லூயி மௌண்ட்பேட்டன் வற்புறுத்தலின் பேரில் பிரதம மந்திரியான ஜவஹர்லால் நேரு "தீன்மூர்த்தி'' இல்லத்தில் குடியேறினார்.

இதனால், பொறுப்பை நிர்வகிக்க வேண்டிய பணியும், இரவு பகலின்றி உழைக்கும் தந்தையை அருகிலிருந்து கவனிக்க வேண்டிய நிலைமையும் இந்திராவுக்கு உருவாயிற்று.



அருமைத் தந்தை நேருவுடன் அரசியல் ஆலோசனை

இத்தனை பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்ட இந்திரா, வாரக்கடைசியில் கணவனைக் காண 270 மைல்களைக் கடந்து குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு லக்னோ வரவேண்டி இருந்தது.

இந்திரா படும் துன்பத்தைக் கண்ட கணவர் பெரோஸ் காந்தி "நீ தந்தையுடன் இரு, நான் அடிக்கடி வந்து பார்க்கிறேன்'' என்று கூறினர்.

1952-ம் ஆண்டு நடந்த முதலாவது பொதுத் தேர்தலில் பெரேலி என்ற தொகுதியில் லோக சபைக்குப் போட்டியிட்ட பெரோஸ் காந்தி பெருந்தொகையான வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார்.

தனது கடமையை சரிவர செய்வதற்காக பெரோஸ் காந்தி தனது இருப்பிடத்தை டில்லிக்கே மாற்றிக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் தனக்கென்று ஒரு தனி இடத்தையும் புகழையும் ஏற்படுத்திக்கொண்ட பெரோஸ் காந்தி பாராளுமன்ற அங்கத்தவர்களிடையே மிகச் சிறந்தவர் என்ற பெயரையும் எடுத்துவிட்டார்.

1952-ம் ஆண்டு எதிர்பாராதவிதமாக அரசியலில் பங்கு பற்றும் நிலை இந்திராவுக்கு ஏற்பட்டது. முதன்முதல் பொதுத்தேர்தலில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகியது.

சம்பா பகுதியில் பண்டிட் ஜவஹர்லால் நேரு கலந்து கொள்ளும் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது.

ஒரு சமயத்தில் இரண்டு இடங்களில் கூட்டம் நடப்பதாகக் கூட்ட ஏற்பாட்டாளர்கள் அறிவித்துவிட்டார்கள்.

ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நூறு மைல்களுக்கு மேறபட்ட தூரம். என்ன செய்வது? இந்திரா தந்தை நேருவிடம் போய் "ஓர் இடத்திற்கு நீங்கள் போங்கள்; மற்றோர் இடத்திற்கு நான் போகிறேன்'' என்றார்.

1950-ம் ஆண்டு தொடக்கம் தனது தந்தைக்கு வலது கரமாக இருந்து உதவி புரிந்துவந்தார் இந்திரா.



1955-ம் ஆண்டு இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்து காங்கிரஸின் வெற்றிக்காக இந்திரா உழைக்கலானார்.

1959-ல் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் திகதி மார்பில் ஏதோ வலி ஏற்படுவதாக டாக்டருக்கு போன் செய்த பெரோஸ் தானே வண்டியை ஓட்டிக்கொண்டு போய் டாக்டரின் அறைக்குள் நுழைந்தார். அங்கேயே மயங்கி விழுந்துவிட்டார்.

## கணவர் காலமானார்!

கணவருக்கு மாரடைப்பு, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி கேரளாவில் இருந்த இந்திரா காந்திக்கு எட்டியது.

உடனடியாக கணவரைக் காண டில்லிக்கு விமானத்தில் பறந்து வந்தார்.

கணவரின் உடல் நிலை மோசமாக இருப்பதை உணர்ந்த இந்திரா இரவு முழுவதும் கணவரின் கையைப் பற்றிக்கொண்டு அவர் அருகிலேயே அமர்ந்திருந்தார்.

மறுநாள் காலை தன் அன்புத் துணைவியின் கையைப் பற்றிய வண்ணம், பெரோஸ் காந்தி தமது 48-வது வயதிலே காலமானார்.

கணவர் மறைந்த துயரம் தாங்க முடியாத இந்திரா மூன்று நாட்கள் தன்னை ஓர் அறைக்குள் பூட்டிக்கொண்டார்.

''கண் மூடி கண் திறப்பதற்குள் நடந்துவிட்டது. எவ்வளவு சிறு வயது அவனுக்கு. இவ்வளவு பேரும் புகழும் இருப்பது எனக்கே தெரியவில்லையே'' என ஜவஹர்லால் நேரு பெரோஸ் காந்தி மறைவு கேட்டு வாய் விட்டே புலம்பினார்.

இந்திராவின் வாழ்வில் அடிக்கடி சோதனைகளும் துன்பங்களும் தொடர்ந்து ஏற்பட்ட வண்ணமே இருந்தன.

சின்னஞ்சிறு வயதில் தாத்தா மோதிலால் நேருவை இழந்தார். எதிர்பாராத நேரத்தில் அன்னையார் கமலா நேருவைப் பறி கொடுத்தார். இந்திரா புகழடைந்து வரும் நேரத்தில் கணவர் காலமானார்.

கணவர் பெரோஸ் காந்தியும் அரசியல் வானில் சுடர் விடும் போது தான் மரணமானார் ''என்னை வதைத்த மரணங்களில். நான் தாங்க முடியாது சகித்தது என் கணவர் பெரோஸ் இறந்த போதுதான். நான் சற்றும் எதிர்பாராமல் திடீரென்று நேர்ந்து விட்டது, அது கொடிய அனுபவம்.''

இவ்வாறு. இந்திரா எழுதிய கடிதமொன்றில் தனது துயரத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

மனதில் தோன்றும் சந்தேகங்களைப் பற்றி நேரு மகள் இந்திராவிடம் விவாதித்து முடிவுக்கு வருவாராம்.

''இந்திரா பல சமயங்களில். எனக்கு பிடிக்காத தன் மனதுக்கு சரியென்று தோன்றுவதைச் செய்வாள். காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு அவள் வருவதைக்கூட முதலில் நான் வெறுத்தது உண்டு. அவளும் நானும் வேலை செய்யும் காலங்களில் நண்பர்களாகச் செயல்பட்டோமே தவிர அதில் தந்தை மகள் என்ற உறவு இருக்கவில்லை அவளும் நானும் சிலவற்றை ஒப்புக்கொள்வோம். சில விஷயங்களில் மாறுபடுவோம். இந்திரா வலிமையான எண்ணங் கொண்ட சிந்திக்கத்தெரிந்த ஒரு பெண்.''



இவ்வாறு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விச்குப் பிரதமர் ஜவஹர்லால் நேரு பதில் அளித்துள்ளார்.



பாரிஸ் நகர வீதியில் அன்னை இந்திராவுடன் அருமைப் புதல்வர்கள்

அருமைத் தந்தை நேருவை ''பாபு'' என்று அழைக்கும் இந்திரா, அத்தை கிருஷ்ணாவிற்கு 1964-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி 'போன்' செய்து ''உடனே வாருங்கள் பாபுவின் உடல் நலம் மோசமாயிருக்கிறது'' என்று அறிவித்தாராம்.

''காடுகள் அடர்த்தியாக, பசுமையாக இருக்கின்றன, அங்கு நான் தூங்குவதற்கு முன்னால் பல காத தூரம் போக வேண்டும், பல வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்''

ரொபர்ட் ஃபாரஸ்டின் கவிதை வரிகள் நேருவுக்கு பிடித்தமானவை. அந்தக் கவிதை வரிகள் நேருவின் படுக்கை அருகில் மேசையில் இருக்க அவரது ஆவி அன்று பிரிந்தது.

## நேருவின் உயில்

''இந்திய மக்கள் அனைவரும் என்பால் அளவிலா அன்பு காட்டி வந்துள்ளனர். விலை மதிக்கமுடியாத அவ்வன்பிற்கு எவ்வகையிலும் என்னால் ஈடு செய்ய முடியாது. ஆனால் அவர்களுடைய அன்பிற்குத் தகுதியற்றவனாக நின்று விடாமல் என் வாழ்நாள் முழுவதும் அவர்களுக்காக என்னால் இயன்றதைச் செய்வேன்.

''நாட்டின் இன்ப துன்பங்களில் விலகாது ஓடி நின்று என்னோடு பங்கு கொண்ட பல்துறை பேதைகளுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

''நான் இறந்த பின்பு எவ்வித சடங்குகளும் எனக்காக நடத்தப்படுவதை நான் விரும்பவில்லை. மதச் சடங்குகளில் அடிமைப்பட்டுக் கிடப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.

''நான் உயிர் நீத்த பின்பு என் உடல் எரிக்கப்பட வேண்டும் என விரும்புகிறேன். ஒரு வேளை, நான் வெளிநாட்டில் இருக்கும் பொழுது உயிர் பிரிந்தால், என் உடல் அங்கேயே



தகனம் செய்யப்பட வேண்டும். அதன் பிறகு, எனது அஸ்தி அலகாபாத் நகருக்கு அனுப்பப்பட வேண்டும். அவ்வஸ்தியை ஒரு கைப்பிடியளவு கங்கையாற்றில் கரைக்கப்படவேண்டும்.

''இந்த ஆற்றில் என் அஸ்தி கரைக்கப்பட வேண்டும். என்பதற்கு எந்தவொரு மதக் கோட்பாடும் காரணமன்று சிறுவயது முதற் கொண்டே கங்கை, யமுனை, ஆறுகளோடு என் வாழ்க்கை ஒன்றி விட்டது, நான் வளர, வளர இந்தப் பிணைப்பு இறுகி வளர்ந்து கொண்டே வந்துள்ளது.

''காலம் காலமாக அந்த நதிகளைப் பற்றி நீரோடு நீராய்க்கலந்து விட்ட கதைகளும், கவிதைகளும் வனப்பும் வரலாறும் என் உள்ளத்தில் நீங்காது நிலைத்துவிட்டன.

''இந்த ஆறுகளில் கங்கைக்கு மட்டும் தனிச்சிறப்புண்டு இதன் கதைதான் இந்தியத் தாயின் வரலாற்று ஏடு, அவ் வேட்டில் அவளுடைய வாழ்வும் தாழ்வும், இன்பமும் துன்பமும் வெற்றியும் தோல்வியும் பொறிக்கப்பட்டுள்ளன.

''வெள்ளிப் பனிமலையில் தோன்றி ஆழ்ந்தகன்ற பள்ளத் தாக்குகளையும், பரந்த சமவெளிகளையும் கடந்து, அகன்ற கடலில் கலந்துவிடும் இந்தக் கங்கையாறு இந்தியாவின் கடந்தகால, நிகழ்கால எதிர்காலச் சின்னமாகும் அதனால் தான் இந்திய நாட்டிற்கும் அதன் பண்பாட்டிற்கும் என் கடைசி வழிப்பாடாக என் அஸ்தியில் ஒரு கைப்பிடியளவு அதில் கரைக்கப்படவேண்டும் என விரும்பிகிறேன்.

கங்கையில் கரைக்கப்பட்டது போக, எஞ்சியுள்ள அஸ்தி முழுவதும் ஆகாய விமானத்தில் உயர எடுத்துச் செல்லப் பட்டு, அங்கிருந்து தூவப்பட வேண்டும்; ஏழைகள் நெற்றி வியர்வை விழ உழைக்கும் வயல்களின் மீதெல்லாம், அது படிய வேண்டும் அவ்வாறு படிந்து இந்திய நிலத்தின் மண்ணோடு மண்ணாக இரண்டறக் கலந்து விட வேண்டும்.''

இவ்வாறு பிரதமர் ஜவஹர்லால் நேருவின் உயிலின் படி அவரது அஸ்தி இந்திய நாடு முழுவதும் தூவப்பட்டது.

ஜவஹர்லால் நேருவுக்குப் பிரியமான காஷ்மீர் மலைப் பகுதிகளில் அஸ்தியை இந்திராவே தன் கைப்பட தூவினார்.

ஜவஹர்லால் நேரு வாழ்ந்த 'தீன்மூர்த்தி' பவனம் நேரு உபயோகித்த அறைகள், மற்றும் படுக்கை அறைகள், உட்கார்ந்து எழுதும் மேசை நாற்காலி, அவரது பேனா உடைகள் அன்று இருந்ததைப் போலவே இன்றும் வைக்கப்பட்டு வருகின்றன.

இந்திராவின் உள்ளத்தில் வேதனையோ, துன்பமோ இருந்தால் அந்த அறைக்குச் சென்று சிறிது நேரம் செலவிட்டு வந்தால் மனதில் நிம்மதி ஏற்படுகிறது என அவர் நம்பினார்.

பிரதமர் நேருவின் மறைவால் அவரது இடத்திற்கு லால்பகதூர் சாஸ்திரி பிரதமராக நியமிக்கப்பட்டார்.

1964-ம் ஆண்டு பிரதமர் லால் பகதூர் சாஸ்த்திரியின் அமைச்சரவையில் இந்திரா காந்தி தகவல் செய்தித்துறை அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றார்.

1966-ம் ஆண்டு பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி ரஷ்யாவில் தாஷ்கண்ட் என்னுமிடத்தில் திடீரென மரணமானார் இந்திரா காந்தி இந்தியப் பிரதமராகப் பதவி ஏற்றார்.

## இந்தியாவும் இந்திராவும்!

இந்தியாவின் தலைவிதியை இந்திரா காந்தி நிர்ணயிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தியா தான் இந்திரா!
இந்திரா தான் இந்தியா!
என்ற நிலை உருவாகியது.



பதினொரு வருட காலத்துக்கு இந்தியாவைப் பல சோதனைகளுக்கிடையே துணிவுமிக்க மாலுமியைப் போல வழிநடத்திச் சென்றார் இந்திரா காந்தி.

இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவுக்கு மிகவும் இக்கட்டான நிலைமைகள் ஏற்பட்டன.



சின்னஞ்சிறு மழலை செல்வங்கள் மீது அன்னை இந்திராவுக்கு அளவற்ற அன்பு. சிறுவர்கள் ஓவியப்போட்டி பரிசளிப்பின் போது சிறுவன் ஒருவனுக்கு பரிசு வழங்குகிறார்.

இந்தியாவிற்கு 1971-ம் ஆண்டு ஒரு பெரிய சோதனைக் காலம் என்று கூறலாம்.

அண்டை நாடான பங்களாதேஷிலுள்ள கிழக்கு வங்காளத்திலிருந்து, மேற்கு பாகிஸ்தான் இராணுவ அக்கிர

மங்களைத் தாங்க முடியாமல் ஒரு கோடிக்கு மேற்பட்ட அகதிகள் இந்தியாவிற்குள் பிரவேசித்தனர்.

அகதிகளாக வந்தவர்களை ஆதரிக்க வேண்டிய கடமை அன்னை இந்திராவிற்கு ஏற்பட்டது.

அகதிகளாக வந்தவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், வைத்திய சுகாதார வசதிகளும் வழங்கவேண்டிய பெரும் பொறுப்பு இந்திய அரசிற்கு ஏற்பட்டது.

இருள் சூழ்ந்த இவ்வேளையில் நாட்டிற்கு வழி காட்டும் ஒளிவிளக்காகப் பிரதமர் இந்திரா காந்தி விளங்கினார்.



கருணையின் உருவம் அன்னை மதர்தெரசாவுடன்
காவியத்தலைவி அன்னை இந்திரா.

இந்த நெருக்கடியான நிலையில் தக்க நடவடிக்கைகளைத் தகுந்த காலத்தில் எடுத்து, கடைசிக் கட்டத்தில் ஏற்பட்ட இந்தியா - பாகிஸ்தான் போரை திறமையுடன் நடத்தி வெற்றிக்கொடி நாட்டினார்.



இந்தியா, பாகிஸ்தான் போரைப் பற்றி உலகமே வியக்கிறது.

போர் ஆரம்பமானவுடன் இந்திரா காந்தி நாட்டு மக்களுக்குப் பொறுமையுடன், பொறுப்போடு வேண்டுகோள் விடுத்தார்,

"நம் நாட்டைச் சுற்றி கடும் பயங்கரம் சூழ்ந்திருக்கிறது. இந்த நேரத்தில் நான் உங்களுடன் பேசுகிறேன்.

"பங்களாதேஷில் ஆரம்பித்த யுத்தம் இன்று இந்தியாவின் மேல் திரும்பி, என்மேல், என் நாட்டின் மேல், என் மக்கள்மேல் ஒரு மாபெரும் சுமையை ஏற்றிவிட்டது, நமக்கு இந்த யுத்தத்தை எதிர்நோக்குவதைத் தவிர வேறு வழி தென்படவில்லை. நமது வீரர்களும், படை அதிகாரிகளும் நாட்டை காக்கத் தம் பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்ற ஆரம்பித்து விட்ட இந்நிலையில் ஒவ்வொரு பிரஜையின் ஒத்துழைப்பும் அத்தியாவசியமாகின்றது.

"பாரத நாடு சமாதானத்தை விரும்பும் நாடு. நமது ஜனநாயகத்தைக் காத்துக் கொண்டால் தான் நமது சமாதானம் நிலைத்து நிற்கும் என்பதும் நமக்குத் தெரிந்திருப்பதால் நாமும் நம்மை நம் ஜனநாயகத்தை, அதன் மூலம் நம் சமாதான உரிமையைக் காத்துக் கொள்ள இன்று போரில் இறங்கியிருக்கும்.

"அநியாய ஆக்கிரமிப்பை அடக்குவோம், ஒன்றுபட்ட இந்தியாவிற்கு இது பெரிய காரியமல்ல, ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் நாம் ஒத்துழைப்போம்.

"ஜெய் ஹிந்த்"

ஆசியாவின் ஜோதி அன்னை இந்திரா ஆற்றிய உரை ஒவ்வொரு இந்தியனின் இதயத்தையும் தொட்டது.

போர் முடிந்த ஒரு சில நாட்களில் இருபத்தாறு இராணுவ ஆஸ்பத்திரிகளுக்கு இந்திரா விஜயம் செய்தார்.

ஒவ்வோர் ஆஸ்பத்திரியிலும் அதிக நேரத்தைச் செலவிட்டார். ஒவ்வொரு படை வீரனிடமும் சென்று, அவரது குடும்பத்தைப் பற்றி அக்கறையோடு விசாரித்தார்.

போர் ஆரம்பிப்பதற்கு சில நாட்களுக்கு முன்னால் சாம்ப் பகுதியில் உள்ள இராணுவ முகாமைப் பார்வையிடச் சென்றிருந்தார் இந்திரா.

புதை குழிகளும், விஷ ஜந்துக்களும் நிறைந்த அப்பகுதியில் சற்றும் அஞ்சாமல் ஒவ்வோர் முகாமுக்கும் சென்று படை வீரர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

குறைகளை விசாரித்துத் தெரிந்து கொள்வதுடன் நில்லாது, தனது நேரடிப் பார்வையின் கீழ் அவற்றைத் தீர்த்து வைக்க நடவடிக்கைகளும் எடுத்தார்.

இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களைத் தாமே பார்த்து கையெழுத்திட்டார். ஓர் அன்னையைப் போல அந்த குடும்பத்தினரிடம் அன்பு காட்டி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டினார்,

இந்திரா தனது அரசியல் வாழ்வில் அடுக்கடுக்காகப் பல கடுஞ்சோதனைகளை எதிர் நோக்கினார்.

1977-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ்கட்சி படுதோல்வி அடைந்தது. அதனால் இந்திரா காந்தி எதிர்க்கட்சித் தலைவரானார்.

1977-ம் ஆண்டுக்கும் 1980-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், இந்திரா காந்தி இரண்டு முறை சிறைச்சாலைக்குள் தள்ளப்பட்டார்.

பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். காங்கிரஸ் கட்சியிலிருந்து சில முக்கியஸ்தர்கள் அவரை விட்டு வெளியேறினார்கள்.



1980-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்திரா காந்தியின் காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி ஈட்டியது.

மீண்டும் இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமரானார்.

அதே ஆண்டு, ஜூன் மாதம் இந்திரா காந்தியின் வலது கரம் போல் விளங்கிய இளைய புதல்வரான சஞ்சாய் காந்தி விமான விபத்தில் அகால மரணமடைந்தார்.

அரசியல் வானில் சுடர் நட்சத்திரமாய் பிரகாசிக்க வேண்டிய மைந்தன் சஞ்சாயின் மறைவு, இந்திராவைப் பெரிதும் வாட்டியது,

உலக அரசியல் வானில் துணிவுமிக்க தலைவரான இந்திரா காந்தி 1983-ம் ஆண்டு அணிசேரா இயக்கத்தின் தலைமைப் பதவியை ஏற்றார்.

1983-ம் ஆண்டு அணிசேரா இயக்கத்தில் 101 நாடுகள் அங்கம் வகித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தனை நாடுகளும் ஏகமனதாக இந்திராகாந்தியை அணிசேரா இயக்கத்தின் தலைவியாகத் தெரிவு செய்தன என்றால். இந்திராவின் அரசியல் மதியூகமும், சாதுரியமும் எத்தகையன என்பதை உலகமும் உணர்ந்து கொண்டது என்றே பொருள்.

1984-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் திகதி, இந்திய வரலாற்றில் ஒரு கறை படிந்த அத்தியாயமாகும்.

ஆசியாவின் ஜோதியை, சுதந்திர இந்தியாவின் வீரப் புதல்வியை அணிசேரா இயக்கத்தின் தலைவியைக் கொலை செய்துவிட்டார்கள். கொடிய அரக்கர்களின் துப்பாக்கி குண்டுகள் அவரின் உடலை துளைத்தன. அவருடைய மெய்க்காப்பாளர்களான இரு சீக்கியர்களே அவரை மிக அருகிலிருந்து சுட்டனர்.



அணிசேரா இயக்கத் தலைவியான ஆசிய ஜோதி அன்னை இந்திராவுடன் உலகத் தலைவர்களான யூகோஸ்லாவியா முதல்வர் டிட்டோ, எகிப்திய முதல்வர் கமால் அபதுல் நஸார் ஆகியோர்.



இந்திரா காந்தி சுடப்பட்டார் என்ற செய்தி நாடு, இனம், மொழி கடந்து அகில உலகிற்கும் பரவியது.

11.30 மணிக்கு பி. பி. சி. செய்தியில் இந்திரா இறந்து விட்ட செய்தியை அறிவித்து விட்டார்கள்.

இந்தியப் பிரதமரின் மரணம் இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் தாயை இழந்து விட்டது போன்ற சோக நிலையை உண்டாக்கியது.

இந்திராகாந்தி மரணமானார் என்ற செய்தியை ஒலி பரப்பிய இலங்கை வானொலி வழக்கமான நிகழ்ச்சிகளை நிறுத்திவிட்டுச் சோக இசையை ஒலிபரப்பியது.

இந்திராவின் மரணத்தைப் பற்றி இந்தியப் பத்திரிகை ஒன்று இவ்வாறு தெரிவித்தது:

''அக்டோபர் 31ம் திகதி ஐரிஷ் படத்தயாரிப்பாளர்களான பீட்டர் உஸ்தினொவ் குழுவினருடன் பிரதமரைப் பற்றி எடுக்கப்படும் ஐரிஷ் – மேற்கு ஜெர்மனி தொலைக் காட்சித் திரைப்படம் சம்பந்தமாக பேசுவதற்கு நேரம் கொடுத்திருந்தார் பிரதமர் இந்திராகாந்தி.

அன்று காலை 9 மணிக்கு தமது இல்லத்திலிருந்து அக்பர் ரோடு அலுவலகத்திற்கு இந்திரா நடந்து வந்து கொண்டிருந்தார்.

மூன்றடி தள்ளிப் பின்னால் ஐந்து பாதுகாவலர்கள் அந்தரங்கப் பாதுகாப்பு அதிகாரி தினேஷ் பட் தலைமையில், அந்தரங்கச் செயலாளர் தவான் அவர்களுக்குப் பின்னால் .....

அந்த இரு பாதுகாவலர்களும் இரண்டு காம்பவுண்டுகளை இணைக்கும் கேட்டுக்குள்......

பிரதமர் இந்திரா நுழைகிறார்.

அந்த இரு பாதுகாவலர்கள் தான் சப் இன்ஸ்பெக்டர் பென்த் சிங்கும், கான்ஸ்டபிள் சத்வன்த் சிங்கும், இருவரும் இரு புறமும் காவல் நின்ருர்கள்.

சத்வன்த் சிங் ஸ்டென் துப்பாக்கியை 'ஸல்யூட்' அடிக்க உயர்த்துகிருர் என்று பிற பாதுகாவலர்கள் எண்ணும் முன் பென்த் சிங் தன் .38 ரிவால்வரினுல் ஐந்து முறை பொய்ண்ட் பளாங் ரேஞ்சில் சுட... ... தொடர்ந்து சத்வன்த் சிங்கின் ஸ்டென் துப்பாக்கி தன் குண்டுகளை எல்லாம் காலி செய்து விட்டே நின்றது.

ரமேஷ்வர் என்ற பாதுகாவலர் விரைந்து சென்று இந்திராவின் உடலை கவசம் போல் மூடிக்கொள்ள, அவரும் குண்டடிபட்டார். ஆனுல் உயிருக்கு ஆபத்தில்லை.

பாதுகாவலர்கள் பென்த் சிங்கை சுட்டுக் கொன்ருர்கள். சத்வன் சிங் குண்டு காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்.

படத் தயாரிப்பாளர் பீட்டர் உஸ்த்தினேவ் கூறுகிருர். ''என் கைக் கடியாரத்தில் அப்போது சரியாக 9 மணி 8 நிமிடம் 27 விநாடி. முதலில் மூன்று குண்டுச் சத்தம் கேட்டது. யாரோ பட்டாஸ் வெடிப்பதாகச் சொன்னுர்கள். தொடர்ந்து கேட்ட சத்தம் ''ஸ்டென்'' துப்பாக்கிக் குண்டுகள் தான் என்பதை உணர முடிந்தது. சிறிது இரண்டு நிமிட இடைவெளிக்குப் பின் மீண்டும் இரு முறை குண்டுச் சத்தம் கேட்டது.''

பிரதமர் இந்திரா காந்தி சுடப்பட்டு மரணமானுர் என்று செய்தி பரவ... கலவரங்கள் ஆரம்பித்துவிட்டன. பல இடங்கள் தீக்குளிக்கத் தொடங்கிவிட்டன.

இந்திய மக்களில் பலர் சீக்கிய சமூகத்தவர்களை பழி வாங்கத் தொடங்கிவிட்டனர்.



மத வெறியும். மனிதக் கொலை வெறியும் எத்துணை தூரம் கொடுமைகளுக்கு வித்திடும் என்பதை அங்கு நடைபெற்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டின.

மனிதகுல நாகரிகத்தின் மீது இரத்தக் கறை படிந்தது. இந்தப் பயங்கர நிலை மறு நாள் மாலை வரை நீடித்தது. மாலை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

## காவியத் தலைவி காவியமானுர்!

நவம்பர் 2-ம் திகதி பிரதமரின் பூதவுடல் அவருடைய தந்தை பண்டிட் ஜவஹர்லால் நேரு வசித்த தீன்மூர்த்தி பவனில் பொது மக்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது.

பிரதமருக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்த மக்கள் வெள்ளத்தை தடை போட முடியாமல், போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்துதான் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது.

1984-ம் ஆண்டு நவம்பர் 3-ம் திகதி ஆசியாவின் ஜோதி அன்னை இந்திராவின் இறுதி யாத்திரை தொடர்ந்தது.

'தீன்மூர்த்தி' பவனிலிருந்து சரியாக 12-30 மணிக்கு இராணுவ பீரங்கி வாகனத்தில் பிரதமரின் பூதவுடல் வைக்கப்பட்டு இறுதி ஊர்வலம் புறப்பட்டது.

காலையிலிருந்தே ஜன சமுத்திரம். முதல் நாள் இரவே குடும்பம் குடும்பமாக, பாலருந்தும் பச்சிளங் குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு வந்து ஊர்வலம் செல்லும் பாதைகளில் எல்லாம் கிராம மக்கள் ராஜஸ்தானி, பார்ஸி, சிந்தி உடைகளில், மொழிகள் பல பேசிக்கொண்டு, பிரதமரின் முகத்தை பார்க்க வேண்டும் என்ற ஆசையில், ஆர்வத்தில்...

பூக்களால் அலங்கரிக்கப்பட்ட இராணுவ வாகனத்தில் மூவர்ண தேசிய கொடியால் போர்த்தப்பட்டு......

பூ ரதத்தில்......

பூ உடல் சென்றது.

வழியெல்லாம் மக்கள், விழியெல்லாம் கண்ணீர். கண்ணீர் வழியும் முகத்துடன் கோஷமிட்டனர்.

“ஜப்தக் சூரஜ் சாந்த் ரஹோகா இந்திரா

தேரா நாம் ராஹோகா.

சூரியர் சந்திரர் இருக்கும் வரை இந்திரா

உன் நாமம் இருக்கும்.”

இவ்வாறு வழியெல்லாம் மக்கள் கண்ணீர் வடித்த வண்ணம் கோஷமிடுகின்றனர்.



பூ ரதத்தில் பூ உடல். இறுதி பவனி



பிற்பகல் 3-16 க்கு சாந்தி வனத்துக்குள் ஆசிய ஜோதியின் பூ உடல் நுழைகிறது.

பூத உடல் கீழே இறக்கப்படுகிறது.

இராணுவ வீரர்கள் சுமந்து வருகின்றனர்.

முன்புறம் ராஜீவ் காந்தியும், அருண் நேருவும் தோள் கொடுக்கிறார்கள்.

இராணுவ மரியாதைகள் செலுத்தப்படுகின்றன.

அலங்கரிக்கப்பட்ட மேடையில் பூ உடல் கிடத்தப்படுகிறது. போர்த்தப்பட்ட தேசிய மூவர்ணக் கொடியை இராணுவ வீரர்கள் எடுக்கின்றனர்.

கங்கை நீரில் குளிப்பாட்டப்பட்டு, தங்கநிறப் ‘போர்டர்’ போடப்பட்ட சிவப்பு நிறச் சேலை கட்டப்பட்டு, சந்தனம் பூசப்பட்ட இந்திராவின் பூவுடல்.....

இறுதிச் சடங்குகள் ஆரம்பமாகின்றன, வெள்ளை குர்த்தா பைஜாமாவில் காந்தி குல்லாயில் ராஜீவ் ...

அருகில், மனைவி ஸோனியா.

மகன் ராகுல்...

மகள் பிரியங்கா.

மேனகா காந்தி வெள்ளைப் புடவையில்,

அருகில் மகன் வருண், பிரியங்காவின் கைகளை கோர்த்துக் கொண்டு

இந்து முஸ்லிம், கிறிஸ்தவ, சீக்கிய வேத மந்திரங்கள் ஒலிக்கின்றன. கையில் அக்கினியுடன் ராஜீவ் வலம் வருகிறார். ஆச்சாரியார்கள் வேதம் ஓத, இராணுவ பீரங்கிகள் உயர்ந்து குண்டுகள் பொழிய......

அடுக்கப்பட்ட சந்தனக் கட்டைகள் மீது ..

நெய், தேன் மழையில் .....

மூண்டது பெரும் தீ......

ஒரு சகாப்தத்தின் வீரக் காவியத்தை எழுதிய கரங்கள் ஓய்ந்து விட்டன.

காவியத்தின் தலைவியே காவியமாகி விட்டார்.

# ஓர் அற்புதக் கலைஞனின் கால் நூற்றாண்டு கால கலை இலக்கியப் பணி

ராஜ ஸ்ரீகாந்தன்

கலை இலக்கியத் துறையில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக இடையறாத்தொடர்ச்சியுடன்காலடித்தடம்பதித்து வரும் ஓர் அற்புதக் கலைஞன் அந்தனி ஜீவா. இவருடைய 25 ஆண்டு கால எழுத்துப் பணியை கௌரவிக்குமுகமாக கல்ஹின்னை தமிழ் மன்றம் தனது 25 வது வெளியீடாக இவரின் ''அன்னை இந்திரா'' என்ற நூலை வெளியிடுகிறது

கவிதை, கட்டுரை. சிறுகதை, சிறுவர் இலக்கியம், விமர்சனம், நாடகம், பத்திரிகைத்துறை போன்றவற்றில் ஈடுபாடு கொண்டு தனது ஆக்கங்களை வெளிக்கொணர்ந்த அந்தனி ஜீவா கலை இலக்கிய உலகில் தான் ஒரு சகலதுறை வல்லாளனென்பதை நன்கு புலப்படுத்தியுள்ளார்.

## சிறு கதை

அறுபதுக்களின் ஆரம்பத்தில் இலக்கியப் பிரவேசஞ்செய்த அந்தனி ஜீவா இதுவரை சுமார் இருபது சிறு கதைகளை எழுதியுள்ளார். இவற்றுள் ''மலடு'' (ஈழ நாடு), "விதி'' (சிந்தாமணி), ''புறட்சலட்'' (சிரித்திரன்), ''தவறுகள்'' (அமுதம்), ''நினைவுகள்'' (தேச பக்தன்) ஆகிய சிறு கதைகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். இவருடைய சிறு கதைகள் குஞ்சரக் கன்றுகள், பன்றிக் குட்டிகளல்ல. இவர் தொடர்ந்து சிறு கதைகளை எழுதியிருந்தால் தமிழுலகில் சிறந்த சிறு கதையாசிரியராகத் திகழ்ந்திருப்பாரென்பதற்கு மேற்காட்டிய சிறு கதைகள் உறுதிச்சான்று பகிர்கின்றன.

## கட்டுரை

கட்டுரை இலக்கியத்தில் கைதேர்ந்தவர் அந்தனி ஜீவா. இவருடைய பல கட்டுரைகள் தினகரனிலும் ''மல்லிகை'' போன்ற இலக்கியச் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. ஈழத்தின் மூத்த படைப்பாளிகளில் ஒருவரான அ. ந. கந்தசாமியைப் பற்றி ''சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன்'', தமிழகத்தின் தலைசிறந்த இலக்கியவாதி ''ஜெயகாந்தனைக் கண்டேன்'', ''ஜெயகாந்தன் ஒரு பார்வை'', எழுத்தாளர்களைப் பற்றிய விமர்சனத் தொடர் கட்டுரை ''நமக்குத் தொழில் எழுத்து'', நாடக - திரைப்படத்துறை விமர்சனக் கட்டுரை ''சில நேரங்களில் சில கலைஞர்கள்'' போன்ற கட்டுரைகளைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். தினகரனில் ''நினைத்துப் பார்க்கிறேன்'' என்ற தலைப்பில் வாரந்தோறும் இவர் எழுதிவரும் தொடர் கட்டுரைகள் பயன்மிக்க பல தகவல்களைச் சுவையுடன் தருகின்றன.

தகவல்களைச் சேகரிப்பதிலும் சேகரித்தவற்றைச் சுவையுடன் தருவதிலும் 'சுறுசுறுப்பான இலக்கியத் தேனீ' அந்தனிஜீவா.

நாடகம்

1970-ம் ஆண்டில் ''முள்ளில் ரோஜா'' என்ற நாடகத்தை எழுதி, நெறிப்படுத்தி நாடக உலகிற் பிரவேசித்த அந்தனி ஜீவா இதுவரை சுமார் பத்து நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். நான்கு கதாபாத்திரங்களைக்கொண்ட "பறவைகள்" மூன்றே கதாபாத்திரங்களைக் கொண்ட "கவிதா" போன்றவை வெற்றிகரமான பரிசோதனை நாடகங்கள். மாத்தளை கார்த்திகேசு எழுதி, அந்தனி ஜீவாவினால் நெறிப்படுத்தப்பட்ட ''தீர்ப்பு'' தமிழ் நாடகத் துறையில் சிறந்த அரங்கப்படைப்பு என விமர்சகர்கள் பாராட்டியுள்ளார்கள். தொழிலாளர் வர்க்கப் பிரச்னை, வேலை நிறுத்தம் போன்றவற்றை ''அக்கினிப் பூக்கள்'' என்ற பெயரில் கலை நயத்துடன் நாடகமாக்கித் தந்துள்ளார் அந்தனி ஜீவா. இந்த நாடகம் ஒன்பது தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ளது, பதுளையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மகாநாட்டின்போது அரங்கேற்றப்பட்ட இந் நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மலைநாட்டுத் தொழிலாளர்கள் உணர்ச்சி மேலீட்டால் முழக்கமிட்டு ஆர்ப்பரித்தனர். இவருடைய ''வீணை அழுகிறது'' என்ற நாடகம் 1974-ம் ஆண்டில் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டது. மீனவர் பிரச்னைகளை மையக் கருவாகக்கொண்ட ''அலைகள்'' என்ற நாடகம் கலாச்சாரப் பேரவையின் நாடக விழாவில் இரண்டாவது பரிசினைப் பெற்றது. ''பறக்காத கழுகுகள்'' என்ற நாடகம் தமிழ் நாடக மேடையின் புதிய தரிசனம் என விமர்சகர்களால் வியந்து பாராட்டப்பட்டது. மகாகவி பாரதி நூற்றாண்டின் போது ''மகாகவி பாரதி'' என்ற நாடகத்தை நெறிப்படுத்தினார்.

தெரு நாடகம்

மக்களுடன் நேரடியான, நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்தச் சிறந்த கலை ஊடாகம் தெரு நாடகம். அந்தனி ஜீவா இத்துறையிலும் ஈடுபாடுகொண்டவர். தெரு நாடக முன்னோடிகளில் ஒருவரான பாதல்சர்க்காரின் பயிற்சிப் பட்டறை 1980-ம் ஆண்டு தமிழ் நாட்டில் நடைபெற்றபோது அதில் பங்குகொண்ட அந்தனி ஜீவா நாடு திரும்பியதும் பல தெரு நாடகங்களை மலையகத்தின் பல பாகங்களிலும் நடத்தியுள்ளார். இவரின் ''வெளிச்சம்'', "சாத்தான் வேதம் ஓதுகிறது'' போன்ற தெரு நாடகங்கள் பல தடவைகள் மக்கள் முன் நடித்துக் காண்பிக்கப்பட்டன.

அந்தனி ஜீவாவின் கால் நூற்றாண்டு கால கலை இலக்கியப் பணி மேலும் தொடரட்டும்.

''தமக்குத் தொழில் எழுத்து'' என்ற கூற்றுப்படி எழுத்தைத் தொழிலாக - வாழ்வாக அந்தனி ஜீவா கொண்டிருக்கிறார்.

ஈழத்து நாடக மேடையில் புதிய வீச்சுக்களையும், புதிய தரிசனங்களையும் கொண்ட நாடகங்களை எழுதி, மேடையேற்றி வருகிறார்.

1970-க்குப்பின் தொழிலாளர் வர்க்கப் பிரச்சனைகளை தமிழ் நாடக மேடைக்கு ''அக்கினிப் பூக்கள்'' மூலம் அறிமுகப்படுத்தினர்.

1974-ம் ஆண்டு இவரது ''வீணை அழுகிறது'' நாடகத்திற்கு அரசு தடை விதித்தது.

சிறு கதை, நாடகம், விமர்சனம் ஆகிய துறைகளில் தனது ஆளுமையை நிலைநாட்டியுள்ளார்.

''புதிய வார்ப்புகள்'' என்ற வரிசையில் இளைய தலைமுறை எழுத்தாளர்களையும் ''பெண் பிரமாக்கள்'' என்ற பெயரில் பெண் படைப்பாளிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

1978-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் நடைபெற்ற தமிழ் நாடு கலை - இலக்கிய பெருமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு நிகழ்த்திய ஆய்வுரை ''ஈழத்தில் தமிழ் நாடகம்'' என்ற பெயரில் நூலுருவில் வெளிவந்துள்ளது.



1980-க்குப் பின் தெரு நாடகத்தை கொழும்பிலும், மலையகத்தின் பல பகுதிகளிலும் நடத்தியுள்ளார்.

மலையகக் கலை இலக்கியப் பேரவை செயலாளராக இருக்கிறார். ''கவிதா'' என்ற பெயரில் சஞ்சிகை வெளியிட்டுள்ளார்.